சிவமயம்

குமரகுருபரன்

மலர் 16] 1965ஆ புரட்டாசி 1-ம் உ (17-9-65) [இதழ்

ஆசிரியர் குழு

1. வித்துவான் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் அவர்கள்
ஸ்ரீ காசிமடம் இளவரசு, திருப்பனந்தாள்
2. திரு. கே. சிவராமன் அவர்கள் M. A.,
சைவ சித்தாந்த தத்துவ விரிவுரையாளர்,
காசிச் சர்வகலாசாலை, காசி.
3. திரு. கே. எம். வேங்கடராமையா அவர்கள் M. A. B. O. L.
பிரின்ஸிபால், செந்தமிழ்க்கல்லூரி, திருப்பனந்தாள்,
4. ராவ்சாஹிப், வித்துவான். திரு. கு. அருணுசலக் கவுண்டர்
அவர்கள், தலைமைத் தமிழ் விரிவுரையாளர், ம. தி. தா. இந்துக் கல்லூரி, திருநெல்வேலி.
5. திரு. பி. செந்தில்நாயகம் பிள்ளை அவர்கள் B. A.,
ஓய்வு பெற்ற மாவட்ட வருவாய் அதிகாரி, புளியங்குடி.
6. திரு. டி. எச். விவேகானந்தம் பிள்ளை அவர்கள் B. A., L. T.,
அசிஸ்ட்டண்டு கமிஷனர்.
H. R. & C. E. (Adm) Dept. Ramanad at Madura-2
7. திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள் M. A.
தமிழ் விரிவுரையாளர், காசி இந்துப் பல்கலைக்கழகம், காசி.

T. M. குமரகுருபரன் பிள்ளை B. A., B. L.,
நிர்வாக ஆசிரியர்.

உள்ளுறை

		பக்கம்
1.	தில்லைச் சிவகாமியம்மை யிரட்டைமணிமாலை 16 ...	441
2.	திருமந்திரம், ஐந்தாம் தந்திரம். (Tirumantiram Tantra the fifth) ...	447
3.	திருவண்டப்பகுதி ...	451
4.	முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ்—உரைநடை	456
5.	வாழ்வில் வாயுக்களின் சிறப்பு	457
6.	திருவாசக அநுபூதி உரை ...	462
7.	List of Translations of the Tiruk-kural	463
8.	கடலும் புணையும் ...	468
9.	சுந்தரமூர்த்தி சுவாமிகளின் அற்புதத் திருப் பதிகங்கள்	474
10.	சிதம்பர இராமலிங்கர் புலம்பர் கண்ணி ...	475
11.	தாயுமானவர் — பராபரக்கண்ணிகள் ...	476
12.	இயற்கையில் இன்பம் ...	477
13.	Hymns of the Tamil Saivite Saints ...	482
14.	புள்ளிருக்குவேளூரில் சந்தனுபிஷேக நிதி.... ரூ.3500	483

உ

சிவமயம்

திருச்செந்திலாண்டவன் துணை

மலர் 16 | விசுவாவசு-ஆ புரட்டாசித் திங்கள் 1-ம௳ [17-9-65] | இதழ் 9

தில்லைச் சிவகாமியம்மை யிரட்டைமணிமாலை

(கட்டுரை 16)

தொண்டைமண்டலாதீனம் மகாசந்நிதானம்

சீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் அவர்கள்

ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் மடாலயம்,

காஞ்சிபுரம்.

திருத்தில்லையில் எல்லையில்லா இன்பக்கூத்து இயற்றும் பெருமானார் பக்கலில் நின்று உயிர்கள் உய்யவேண்டித் திருக்கூத்தைக் கண்டு களிக்கும் நம் அன்னை சிவகாம வல்லியார்க்குச் சினம் உண்டாயிற்று, அது அக்களிப்பின் முடிவோ யாதோ தெரிந்திலது. உயிர்கட்குக் களிப்பின் முடிவில் வெறுப்பும், வெறுப்பின் முடிவிற்களிப்பும் மாறிமாறி உண்டாகும். உலகெல்லாம் படைத்துக்காக்கும் தாயார்க்குமோ அந்நிலை மாற்றம்

தோற்றும்? சாவும் வாழ்வும் பிறப்பும் இறப்பும் இன்பமும் துன்பமும் என்பனவும் இன்னோரன்ன பிறவும் இரட்டைகள் ('துவந்தாவங்கள்') எனப்படும். இவை உயிர்க்கு இயல்பு; இறைவிக்கு இறையும் இல்லை. அப்படியாயும் இறைவிக்குச் சினம் உண்டாவது ஏன்?

உலகியலையொட்டி, உணர்வே உருவாய உத்தம மகா சத்திக்கும் அவ்வியலை யேற்றிக்கூறுவது பாவலர் பழக்கம். எல்லாச் செயலுக்கும் இறைவி அன்றோ காரணி? காரணியின் ஆணையின்றிக் கடுகளவும் உலகியல் காரியப்படாது. அவள் நடத்த நடக்கும் உலகில் அவள் நடையே நண்ணும். எங்கும் எல்லாம் சிவசத்தி முத்திரையே.

"யாதேனுங் காரணத்தால் எவ்வுலகில் எத்திறமும்
மாதேயும் பாகன் இலச்சினையே—"

சத்தியின் வண்ணமே சிவத்தின் வண்ணம்.

"பொன்னிறம் கட்டியினும் பூணினும் நின்றாற்போல்
அந்நிறம் அண்ணலும் அம்பிகையும்—செந்நிறத்தள்
எந்நிறத்த ளாய்இருப்பள்? எங்கள் சிவபதியும்
அந்நிறத்தனாய் இருப்பன் ஆங்கு."

சிவலிங்கத்தின் தத்துவம் போலிகட்கு விளங்குமோ?

"அவளால் வந்த ஆக்கம்இவ் வாழ்க்கையெல்லாம்
இத்தையும் அறியார் பீடலிங்கத்தின் இயல்பும் ஓரார்."

என்பனவற்றால் இதனையும் அடக்கிக் கொள்ளல்வேண்டும்.

இங்கு ஒன்று கருத்திற் கொள்ளத் தக்கதுண்டு. அதாவது, நாம் கருவிகரணங்களாலும் சாங்கம் உபாங்கங்களாலும் செய்யுமவைபோல இறைவனும் செய்கின்றான் எனக் கொள்ளல் கூடாது. அவன் யாது செய்யினும் கரணத்தாற் செய்தல் இல்லை. சங்கற்ப மாத்திரத்தாற் செய்பவன். அச்சங்கற்பமும் மனத்தால் நினைக்கும் அஃது அன்று. அறிவால் அறியும் அதுவே ஆண்டவனது சங்கற்பம். அவனுக்கு அறிவே உருவம் அவ்வறிவே எல்லாவற்றையும் செய்யுங் கரணம். அக்கரணத்

தால் அன்றி மற்று எக் கருவியாலும் செய்ய வேண்டாத இயல்பினன்; அக்கரணம் ஆகிய சத்தியால் தான் அவன் தன் செயலனைத்தும் செய்கின்றான். அதையே 'சத்தி சங்கற்பம்' என்பர் உணர்ந்தோர். அதனைச் சிவஞான சித்தியார் 'அருட் கிரியை' என்கின்றது.

" அன்றருட் கிரியை தன்னால் ஆக்குவன் அகிலம் எல்லாம் "
(சூ. 1. திருவிருத்தம் 63)

" பொன்மை நீலாதிவன்னம் பொருந்திடப் பளிங்கவற்றின்
தன்மையாய் நிற்குமாபோல் சத்திதன் பேதம்எல்லாம்
நின்மலன் றானாய்த் தோன்றி நிலைமை ஒன்றாயேநிற்பன்
முன்னருட்சத்தி தன்பால்முகிழ்க்கும் தான்முளையான் அன்றே."

என்ற அந்நூலின் திருவிருத்தத்தில், தன் சத்திமுகிழ்த்தலும் தான் முளையாமையும் கூறும் சார்பில், தன் சத்தியின் பேதமெல்லாம் தானாய்த் தோன்றும் நிலையும், அப்பேதம் அவன்கண் இல்லாத ஒருமை நிலையும் உணர்த்தப்பட்டன. படவே, சத்தியின்கண் சினம் முதலியன தோன்றின எனக் கூறல் நம்பால் தோன்றுதல் போல வைத்துக் கூறுவதாகாது. அறிவால் நிகழ்த்தும் காரண நிலையில் வைத்துக் கூறுவதாகும். ஆகவே சிவனிடத்தும் சத்தியினிடத்தும் நம்செயலை ஏற்றிக் கூறி அபசாரப் படலாகாது. திருக்கோயில்களில் திருப்பள்ளியறை நிகழ்ச்சியைக் காரண ரூபத்தில் வைத்துக் கருதுவதே அறிவாகும். அதுதான், உலகியலாகிய காரிய ரூபத்தை விளைப்பது. இப்படியே மற்றையவற்றையும் ஆய்ந்தறிந்து கொள்ளல் வேண்டும். கணவனும் மனைவியும் அடையும் ஊடல் எப்படியோ அப்படியே இறைவனும் இறைவியும் ஊடல் அடைவதாகக் கருதுதல் மடமை. காரண ரூபத்தில் வைத்துணர்தலே அறிவாகும். இந்நினைவொடு நோக்குங்கள் இச் செய்யுளை :—

" நங்காய் திருத்தில்லை நன்னுத லாய்நுதல் நாட்டம்ஒத்துன்
செங்காவி யங்கண் சிவப்பதென் னேசெழுங் கங்கையைநின்
பங்காளர் நின்னைப் பணியுமப் போதுகைப் பற்றிமற்றென்
தங்காய் எழுந்திரென் றால்அவட் கேது தலையெடுப்பே. "

இப்பாட்டிலே உள்ள பணிவுக்குமட்டும் இம்மாலையின் 12, 16, 19 ஆம் பாக்களில் ஒப்புமையாகக் கொள்ளும் பகுதி உண்டு.

'பெண்மதி என்படுமோ அச்சிறுநுதற்கே' (12)

என்றது தில்லைவாணி முடிக் கங்கையைக் குறித்தது.

'தாளிற் பதித்த மதித்தழும்புக்குச் சரி எம்பிரான்
தோளிற் பதித்த வளைத்தழும்பே' (16)

என்றதில், மதித்தழும்பு தாளிற் பதித்தமை இறைவன்முடி இறைவிதாளில் விழுந்து பணிந்து படிந்தபொழுது பதிந்ததைக் குறித்தது.

'பிள்ளைப் பிறைநாறுஞ் சீறடியெம் பேதாய்' (19)

என்றதும் அதுவே.

புலவர்க்கு விருந்தாகச் சில சொல்லை ஆராய்குதும். 'நங்கை' என்றது உளப்பாட்டு முறையில் அமைந்த பெயர்ச் சொல். எங்கை என்றது தன்மைக்கும் நுங்கை என்றது முன்னிலைக்கும் தங்கை என்றது படர்க்கைக்கும் உரிய சொற்கள். என்கை எம்கை எனவும நுன்கை நுங்கை எனவும் தன்கை தம்கை எனவும் பிரித்து ஒருமைக்கும் கொள்ளலாம். பன்மைக் கும் கொள்ளலாம். நங்கை என்றதை அங்கனம் கொள்ளல் இயலாது. நம்+கை என்று (முன்னிலையையும் படர்க்கையை யும் உளப்படுததுக் கூறுமிடத்து) ஆரும் பன்மையில் அமைந் ததே அது. இது விளியேற்பது பொருந்தாது. 'அவர்களே' என விளிக்கும் இக்காலத்தில் இது பொருந்தாது போமோ? எங்காய் நுங்காய் என விளியாதது ஏனோ? 'தங்கை' என்னும் படர்க்கைப் பெயர் 'தங்காய்' என விளிக்கப்படுகின்றதை இப் பாட்டிலும் காண்கின்றோம். அது தந்தை என்றது தந்தாய் என்று விளித்தல் போலும் பிழைத்து. தந்தை, நுந்தை, எந்தை என் பனவும் இவைபோல்வன. விளியில் எந்தாய் எனலாம். நுந்தாய் தந்தாய் எனலாமோ? நுன்னப்பனே தன்னப்பனே என விளித் தல் தமிழ்ச் சொல்லமைதியை விளித்தலேயாகும். எங்கையே எனல் பொருந்தும். நுன்புறவியே தனபுறவியே என விளிக்க லாமோ? காலத்தால் தன்புறத்தே பிறத்தல் பற்றித் தனக்கு

இளையாளைப் 'புறவி' எனல் உலக வழக்கு. செய்யுளிலும் பாவலர் அதைக் கொண்டனர். இன்றும் 'என்புறவி' எனப் பெண்டிர் வழங்குதல் உண்டு. 'நம்பி' என்பதும் எம்பி, நும்பி, தம்பி என்பவற்றின் இனம் ஆன சொல்லே. நம்பியும் நங்கையும் ஆகிய இருசொல்லும் ஆடவரிற் சிறந்தோன் பெண்டிரிற் சிறந்தாள் என்னும் பொருளனவாகக் கொள்ளப்படுகின்றன. 'என்பான்' என்ற சொல்லின் பொருளாக என்று சிறப்பித்துச் சொல்லப்படுவான் என்று கூறப்படுதல் புலவர்க்குத் தெரியும். அன்னதொரு பெற்றிமை தோன்றுதலால் தான், அச்சிறப்புரிமை தோன்ற 'நம்பி' என்றும் 'நங்கை' என்றும் வழங்கும் உலகம்.

'நம்பியைக் காண நங்கைக் காயிரம் நயனம் வேண்டும்'

என்றதில் நம் தம்பி நம் தங்கை என்று பொருள் கொள்ளல் ஆமோ? சொற்றோற்றமும் அச்சொற்களை வழங்கும் உலக வழக்கமும் எத்திறத்திலும் ஒன்றுபடுதல் அரிதே. தன்பின் - தம்பின், நுன்பின் - நும்பின், என்பின் - எம்பின் என்பவை தம்பி நும்பி எம்பி என மருவின. நம்பின் என்றது நம்பி என்று மருவிற்று. அது 'புருடோத்தமன்' என்னும் பொருட்டாயிற்று. சிறப்பு இருந்தால் அன்றி ஒருவனை உலகம் 'நம்பி' எனவும் ஒருத்தியை 'நங்கை' எனவும் பிறப்புரிமை தந்து வழங்காது.

'எம்பியை ஈங்குப் பெற்றேன் என்னெனக் கரியதென்றான்' (1760)

எனச் சீவகன், நந்தட்டனைக் குறித்துச் சொன்னதாகத் திருத்தக்க தேவர் பாடினார். எம்மனை (– அன்னாய்) 315. எம்மனை (– எம் இல்லாளே) வருக 327. எம்மனைமார், நும்மனைமார் (– எம்முடைய தாய்மார் நும்முடைய தாய்மார்) 425. என்பவை அவர் வாக்கே. இதில் 'மார்' என்பது 'மகார்' என்றதன் மரூஉ. இது பன்மை. 'மகன்' என்னும் ஒருமையும் 'மகள்' என்னும் ஒருமையும் முறையே 'மான்' 'மாள்' என மருவி வழங்குகின்றன.

'எம்மானே தோன்றினாய் என்னை ஒளித்தியோ' (1801)

என்றதில், 'மகன்' என்றது 'மான்' என்று மருவியதறிந்து 'என் பிள்ளாய்' என உரைத்த நச்சினார்க்கினியரது நுண்

மாணுழை புலச் சிறப்பைப் போற்றுதல் வேண்டும். சொல் லாராய்ச்சியில் அவர் திறம் பிறரிடங் காண்டல் அரிது. 'ஏட்டைப்பட்டு' (1552) என்றதற்கு அவரெழுதிய உரை பெரிது வியக்கற்பாற்று.

இச்சிவகாமியம்மை யிரட்டைமணிமாலைப் பாடலினுரை:- நங்கையே, திருத்தில்லை நாயகியே, உன் மணுளனது நெற்றிக் கண்ணெருப்பை ஒத்து உன் செங்காவிச் சீர்க்கண் சிவந்து சினத்தைத் தோற்றுவது ஏன்? உன்னை இடப்பங்கில் வைத்தா ளும் இறைவர் உன்னைப் பணிந்து ஊடலைத் தீர்க்கும் பொழுது, அவர் முடிமேல் இருக்கும் கங்காதேவியின் கைப்பற்றி என் தங்கையே எழுந்திரு என்று சொன்னுல், அவளுக்குத் தலை நிமிர்வு ஏது?

இதன் கருத்தை விளக்க வேண்டுவதில்லை. தலையெடுப்பு என்பது செருக்குக்கு அறிகுறி. தலையிறக்கம் அதன் மறுதலை. தலையையெடுத்தல் X தலையை இறக்கல்.

பிரபுலிங்க லீலையில் 'ஆதிபகவன் தனதூடல் தணிப்பான் பணிய அவ்விறைவன், பாதம் இறைஞ்சுமதற்கும் நெற்றிப் பகையும் அல்குற் பகையும் ஆம், சீதமதியும் அரவும் விழுஞ் செயற்கும் உவகை செயாமல் அலைமாது பணியுமதற்கு மன மகிழும் உமையை வணங்குவாம்.' என்று சிவப்பிரகாசர் பாடி யருளியதை இங்கு நினைக்க.

(தொடரும்)

உ
திருச்செந்திலாண்டவன் துணை

'குமரகுருபரன்'

திங்கள் வெளியீட்டின் சந்தா நேயர்களுக்கு ஓர் அறிவிப்பு:

தனிப்பிரதி (உள் நாடு)	0–13 ந. பை.
வருடச் சந்தா	ரூ. 1–50 ந. பை.
வெளி நாடு வருடச் சந்தா	5 ஷிலிங் அல்லது ரூ. 3–25 ந. பை.

நிர்வாக ஆசிரியர்.

திருமந்திரம் TIRUMANTIRAM

ஐந்தாம் தந்திரம் Tantra the Fifth

டாக்டர், திரு. பா. நடராசன் அவர்கள் M. A., D. Litt.,
Member, Legislative Assembly,
MADRAS-31.

மலர் 16. இதழ் 8-ன் தொடர்ச்சி

Sariya in Kriya Path leadeth to everlasting bliss

கிரியை யுட் சரியை பாசவினையைக் கெடுத்து இறவாத இன்பத்தைக் கொடுக்கும்

83. திருமன்னும் சற்புத்திர மார்க்கச் சரியை
உரு மன்னி வாழும் உலகத்தீர் கேண்மின்!
கரு மன்னு பாசம் கைகூம்ப,த் தொழுது
இரு மன்னும்; நாடோறும் இன்புற்றிருந்தே.

Hearken Thou! O, worldly creatures that human form assume!
Be steadfast in thine worship of the Lord
In the sariya way the Kriya Path prescribes;
Then shalt the primordial Pasa lie prostrate,
And for thou live in unending bliss for ever.

மானிட வடிவங்கொண்டு உலகியலில் தோய்ந்து கிடப்பவர்களே, கேளுங்கள்! பேரின்ப நலம் தருகின்ற சற்புத்திர மார்க்கத்துள்ளே சொல்லப்படும் சரியை முறை பற்றி இறைவனை நிலையாகத் தொழுதிருங்கள். அப்பொழுது, கருவிலே பிணித்த பாசவினை கைகுவித்துத்தாழும். பின்னர், இறவாப் பெரு வாழ்வைப் பெற்று என்றும் இன்பத்தில் திளைத்திருப்பீர்கள்,

The Ways of Dasamarga

தாசமார்க்க நெறி இன்னதெனல்

84. எளிய நல் தீபமிடல் மலர் கொய்தல்,
அளிதின் மெழுகல், அதுதூர்த்தல், வாழ்த்தல்,
பளிமணி பற்றல், பன் மஞ்சனமாதி
தளிதொழில் செய்வது தான் தாசமார்க்கமே.

Gently light the lamp,
Gather the flowers fragrant,
Humbly paste the holy floor,
Tenderly sweep it,
Sing the Lord's praise,
Count the crystal beads,
Anoint in many ways,
And perform the diverse acts of icon worship.

பணிவொடு விளக்கேற்றல், மலர் எடுத்தல், கனிவொடு தரை மெழுகல், அதனைப்பெருக்கல், தோத்திரங்களைப் பாடுதல், பளிங்குமணி எண்ணிச் செபித்தல், பல்வகை அபிடேகங்களைச் செய்தல்-இன்னவன்ன திருக்கோயில் தொண்டு செய்வதே தாச மார்க்கத்தின் பண்புகளாகும்.

குறிப்புரை: பின்வரும் சிவஞான சித்தியார் செய்யுள் ஒப்புநோக்கற்பாலது:

தாதமார்க்கஞ் சாற்றிற் சங்கரன்றன் கோயில்
    தல மலகிட்டு இலகு திரு மெழுக்குஞ் சாத்திப்
போதுகளுங் கொய்து, பூந்தார் மாலைகண் ணி
    புனிதற்குப்பல சமைத்துப் புகழ்ந்து பாடித்
தீதில் திருவிளக்கிட்டு த்திருநந்த வனமுஞ்
    செய்து திருவேடங் கண்டா லடியேன் செய்வது
யாது பணியீரென்று பணிந்தவர் தம் பணியும்
    இயற்றுவதிச் சரியை செய்வோர் ஈசனுலகிருப்பர்.

சித்தியார் சுபக்கம். சூத. 8 அதி. 2. செய், 19.

வரி: 3 *பளிமணி பறறல் என்பதறகு பள்ளி அறையின் மணி அடித்தல் என்று பொருள் கொள்வாருளர், இதறகு நூறகளில் ஆதாரமில்லை. ஓசை*

உபசாரங்கள், மூன்று, ஐந்து, ஏழு, பத்து, பன்னிரண்டு, பதினாறு, பதினெட்டு, முப்பத்தாறு என தந்திர நூற்களுள் குறிக்கப்படுகின்றன. இதில் மணி அடித்தல் கூறப்படவில்லை. ஜபவிதிகளில் பளிங்கு மணி எண்ணுதல் குறிக்கப்பட்டுள்ளது. விரிவு, Principles of Tantra by Aruthur Avalon *என்ற நூலில் காண்க. பக்.1164-72,*

Hold fast to the Sariya Path; all doubts within thee will vanish

சரியை நெறியே நெறியென்று கொள்ளுமின்; ஐயங்கள் அனைத்தும் அகலும்

85. அது இது ஆதிப்பர மென்று அகல்வர்;
இது வழி என்று அங்கு இறைஞ்சன ரில்லை;
விதி வழியே சென்று, வேந்தனை நாடும்;
அது இது நெஞ்சில் தணிக்கின்ற வாறே.

This the Primal Being, that the Primal Being
Thus in doubt tossed,
Away they moved farther and farther from It;
They wot not this the true Path,
And worshipt not;
Thou do pursue this appointed way,
And seek the King of Kings
That, of truth, shall quell
All doubts within thee swell.

ஆதிப்பரம் பொருள் அதுவோ, இதுவோ என்று மயங்கி, காணாது போய் விடுகின்றனர். சரியை நெறியே நெறி என்று உறுதியாக் கொண்டு, இறைவனை நாடுகின்றாரில்லை; நூற்கள் வகுத்த இவ்வழியே சென்று இறைவனை நாடுங்கள்; அப்பொழுது, அதுதான் பரமன், இதுதான் பரமன் என்ற ஐயங்களெல்லாம் அடங்கி விடும்,

All worship by yogis and Celestial Beings ultimately resolveth into Sariya

யோகியரும் தேவரும் வணங்கும் முறையெல்லாம் சரியையில் முடிகின்றது

86. "அந்திப்பன் திங்கள், அதன்பின்பு ஞாயிறு
சிந்திப்பன்" என்றும் ஒருவன் செறிகழல்
வந்திப்ப, வானவர் தேவனை நாடோறும்
வந்திப்ப தெல்லாம் வகையின் முடிந்ததே.

"I meditate on the Moon, the Nadi on the left,
I shift on to the Sun, nadi on the right"
-The worship the yogins thus at the feet of the One performeth
And the worship the celestial Being daily to the Lord offereth,
-All this but resolveth into the Path of Sariya, ultimate.

"சந்திர நாடி யெனப்படும் இடகலையில் தியானத்தைப் பொருத்துவேன்; பின் சூரிய நாடி எனப்படும் பிங்கலையில் தியானம் செய்வேன்" என்று சொல்லி ஒப்பற்ற பரம்பொருளை யோகியர் வணங்குவதும், விண்ணகத்தேவர்கள் நாளும் இறைவனை வணங்குவதும்—எல்லாம் இறுதியில் சரியை நெறியிலேயே அடங்குகின்றது.

(தொடரும்)

திருவண்டப் பகுதி

திரு. சா. ப. சபாரத்தினம், எம். ஏ , பி. எஸ். சி.,

மலர் 16. இதழ் 8-ன் தொடர்ச்சி

இனி அடிகளார் இறைவன் எளிவந்து தம்மை ஆட்கொண் டருளிய பெற்றியை இத்திருவண்டப் பகுதியில் பன்முறையும் விதந்து கூறுகின்றார். அங்ஙனம் விதந்து கூறுமிடத்தும் செம்மொழிச் செல்வரின் சீரிய இன்பநிலை ஒளிர்கின்றது.

"அண்டப்பகுதியின் உண்டைப் பிறக்கம்"

என்பது தொடங்கி,

"பெண் ஆண் அலி எனும் பெற்றியன் காண்க"

என்பது முடிய இறைவனின் பெருமைகளே அடுக்கி நுவலப் படுகின்றன. இப்பெருமைகளை யெல்லாம் பாட்டில் வடித்த பின்னர், அகநெகிழ்ச்சி யுற்றவராய்க்,

"கண்ணால் யானுங் கண்டேன் காண்க
அருள்நனி சுரக்கும் அமுதே காண்க
கருணையின் பெருமை கண்டேன் காண்க
புவனியிற் சேவடி தீண்டினன் காண்க
சிவனென யானுந் தேறினன் காண்க
அவனெனை ஆட்கொண் டருளினன் காண்க"

என வியப்புணர்வு தோன்றப் பாடுகின்றார். வரம்பிலாப் பேராற்றல் படைத்த அண்ணல் வான்பழித்து இம்மண் புகுந்து மனிதரை ஆட்கொண்டருளிய வள்ளற்றன்மையை அடிகளார் எண்ணி எண்ணி வியப்புமீக்கூர்ந்து மகிழ்கிறார். திருப்பெருந் துறையில் தன் செம்மேனிக் காட்சியான் செம்மை நெஞ்சங்களை யெல்லாம் தன்பக்கல் ஈர்த்தாண்டவன் யாவன்? பருமையிற் பருமையன்; அண்டங்களை அணுக்களாக்குபவன்; நுண்மையுள்

நுண்மையன்; அணுக்களை அண்டங்களாக்குபவன்; படைப்போர் படைக்கும் பழையோன்; காப்போர்க் காக்கும் கடவுள். இப்பெற்றிப்பட்டவன் புவனியிற் சேவடி தீண்டித் தம் புன்மை தீர்க்கப் போந்தான் என்பதை உன்னி உன்னிப் பார்த்து அவன்றன் கருணைப் பெருமையைக் களிகூர்ந்து பாடுகின்றார், அடிகளார். இங்கே இறைவனின் தூல சூக்கும விளக்கம், அடிகளாரின் உணர்ச்சி நிலைக்குத் துணைநிற்கின்றது என்பது தெளிவு.

அடிகளார் இத்துடன் நின்றனரா? இல்லை; இல்லை. தம்மை இறைவன் ஆட்கொண்ட தன்மையை எண்ணுதொறும், எண்ணுதொறும் அவன்றன் பெருமைகளே உள்ளத்துட் குழுமுகின்றன.

“அண்டத்தரும் பெறல் மேகன் வாழ்க
கரும்பணக் கச்சைக் கடவுள் வாழ்க
....
....
நீற்றெடு தோற்ற வல்லோன் போற்றி”

என்று இவ்வாறெல்லாம் வாழ்த்திப் போற்றிய பின்னர், மீண்டும் தாம் ஆட்பட்ட நிகழ்ச்சியை வியந்து மகிழ்ந்து பாடுகின்றார்.

“நடப்பன நடாஅய்க் கிடப்பனகிடாஅய்
நிற்பன நிறீஇச்
சொற்பதங் கடந்த தொல்லோன்
உள்ளத் துணர்ச்சியிற் கொள்ளவும் படாஅன்
கண்முதற் புலனுற் காட்சியும் இல்லோன்
விண்முதற் பூதம் வெளிப்பட வகுத்தோன்
பூவின் நாற்றம் போன்றுயர்ந் தெங்கும்
ஒழிவற நிறைந்து மேவிய பெருமை
இன்றெனக் கெளிவந் தருளி
அழிதரும் ஆக்கையை ஒழியச்செய்த ஒண்பொருள்
இன்றெனக் கெளிவந் திருந்தனன் போற்றி
அளிதரும் ஆக்கை செய்தோன் போற்றி
ஊற்றிருந் துள்ளங் களிப்போன் போற்றி”

எனப் பாடும் போழ்து அடிகளாரது உள்ளம் எழும்புதலும் தணிதலுமாய் ஆனந்தக் கூத்தாடுகின்றது. உள்ளத்தின்

எழுச்சியையும் துள்ளலையும் பாட்டின் அமைப்பு தெள்ளிதாய்க் காட்டிவிடுகின்றது. பாட்டின் இருசீர் அடிகளையும், முச்சீர் அடிகளையும் நாலசைச்சீர் கொண்ட அடியையும் நோக்குக. மேற்காட்டிய பகுதியில் உணர்த்தப்படும் தூலசூக்கும நிலை விளக்கமும், அடிகளாரின் உணர்ச்சி நிலைக்குத் துணைப்பட்டே நிற்கின்றது என்பது தேற்றம்.

மேலும், திசைமுகன் சென்று தேடினர்க் கொளித்தும் முறையுளி ஒற்றி முயன்றவர்க் கொளித்தும், மறைததிறம் நோக்கி வருந்தினர்க் கொளித்தும், இணையிலா ஒளிப்பாட்டம் உருற்றிய இறைவன் தம்மை அறைகூவி ஆடகொண்டமையை மீட்டும் கூறுமிடத்தும், அடிகளார்தம் உள்ளம் எழும்புதலும் தணிதலுமாகவே இருக்கின்றது. இங்ஙனம் இன்ப உணர்ச்சி யுள் அழுந்தியலையும் அடிகளாரின் உள்ளநிலை,

“தன்னேர் அனையான் தானே ஆனதன்மை
என்னேர் அனையார் கேட்கவந்தியம்பி
அறைகூவி ஆட்கொண் டருளி
மறையோர் கோலங் காட்டி யருளலும்
உளையா அன்பென் புருக ஓலமிட்டு
அலைகடற் றிரையின் ஆர்த்தார்த் தோங்கித்
தலைதடுமாறு வீழ்ந்து புரண்டலறிப்
பித்தரின் மயங்கி மத்தரின் மதித்து
நாட்டவர் மருளவுங் கேட்டவர் வியப்பவும்
கடக்களிறேற்றுத் தடப்பெரு மதத்தின்
ஆற்றே னாக அவயவஞ் சுவைதரு
கோற்றேன் கொண்டு செய்தனன்”

எனவரும் அடிகளில் நன்கு முகிழ்க்கின்றது. இப்பகுதிக்கு முன் வந்த அடிகளிற் கூறப்படும் இறைவனின் இருநிலை விளக்கமும் அடிகளாரின் இன்பநிலை விளக்கத்திற்கே துணைநிற்கின்றது.

இனி, மேற்காட்டிய அடிகளுக்குப் பின்வரும் பகுதியே திருவண்டப் பகுதியில் ஈடெடுப்பற்ற பகுதி எனக் கொளல் வேண்டும். இயற்கையழகிற் படிந்திருக்கும் இறையொளி யைக் காட்டவெழுந்த திருமுருகாற்றுப்படையின் கடைப் பகுதி யில் இயற்கை அழகு வெள்ளம் பொங்கிப் பொங்கிப் பெருக்

கெடுத்தல் போல், மணிமொழியாரின் ஆனந்தவடிவைக் காட்ட வெழுந்த திருவண்டப் பகுதியின் இறுதிப் பகுதியிலும் அவர் தம் இன்ப உணர்ச்சி பெருநீத்தமாய்ப் பொங்கி வழிகின்றது. அப்பகுதியின் பொருள் உரைக்கு அப்பாற்பட்டது; அதைப் பாட்டு வடிவிலேயே துய்க்க வேண்டும். 'பிறர்க்குப் புலனாக இவ்வாறிருந்ததெனக் கூறப்படாததாய் யாண்டும் உள்ளத் துணர்வே நுகர்ந்து இன்பமுறுவதோர் பொருளை' அடிகளார் ஈண்டு செஞ்சொற்களான் விளக்குந் திறனே திறன்!

"சொல்லுவ தறியேன் வாழி முறையோ
தரியேன் நாயேன் தானெனைச் செய்தது
தெரியேன்; ஆ! ஆ! செத்தேன் அடியேற்
கருளிய தறியேன்; பருகியும் ஆரேன்
விழுங்கியும் ஒல்ல கில்லேன்
செழுந்தண் பாற்கடல் திரைபுரைவித்து
உவாக்கடல் நள்ளுநீர் உள்ளகம் ததும்ப
வாக்கிறந் தமுத மயிர்ககால் தோறும்
தேக்கிடச் செய்தனன் கொடியேன் ஊன்தழை
குரம்பை தோறும் நாயுடல் அகத்தே
குரம்பைகொண் டின்றேன் பாய்த்தி நிரம்பிய
அற்புதமான அமுத தாரைகள
எறபுத் துளைதொறும் ஏற்றினன் உருகுவது
உள்ளங் கொண்டோர் உருச்செய் தாங்கெனக்
கள்ளுருக்கை அமைத்தனன் ஒள்ளிய
கன்னற் கனிதேர் களிறெனக் கடைமுறை
என்னையும் இருப்ப தாக்கினன் என்னிற்
கருணை வான்தேன் கலக்க
அருளொடு பராஅமு தாக்கினன்
பிரமன்மால் அறியாப் பெற்றியோனே".

இப்பகுதியே பாட்டின் கடைப்பகுதி. இதனை என்னென்பது? சாரற் கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு இழைக்கப் பெற்ற வயப்பெருந் தேனிறால் என்பதா? தெவிட்டா இன்ப அமிழ்த ஊற்றென்பதா? கன்னற் குடம் என்பதா? நம் உள்ளம் தோயு மிடமெல்லாம் இன்பச்சாறு தேங்கிக் கிடக்கின்றதே! இப்பகுதி

யில் தேக்குண்டு கிடக்கும் இன்னருங் கள்ளே பயில்வோர் உள்ளத்துள் ஊற்றெழுந்த வண்ணம் இருக்கின்றது. இன்பப் பெருங்கடலின் ஓங்குபெருந் திரைகளே இப்பகுதயிற் புரண்டு புரண்டு எற்றுகின்றன; சுருண்டு விழும் புணரிகளின ஓதமே அகச்செவியில் ஒலித்த வண்ணம் இருக்கின்றது. இந்த இன்ப நிலையே திருவண்டப் பகுதியின் உயிர்நிலை. இறைவனின் இயல்புகளும் பெருமைகளும் பல அடிகளிற் கிளர்ந்துவெழு கின்றன எனினும் அவ்வியல்புகளும் பெருமைகளும் அடிகளா ரின் உணர்ச்சி நிலையை விளக்குதற்கே துணைநிற்கின்றன. அகத்துறைப் பாட்டுக்களில் வரும் புறத்தோற்ற விளக்கம் போன்றே இப்பாட்டில் ஒளிரும் இறைவனியல்புகளும் அமைந்து விளங்குகின்றன. அங்கு புறத்தோற்ற விளக்கம் உரிப் பொருளைச் சிறப்புறுத்தல்போல் இங்கும் இறைநீர்மை விளக்கம் இன்ப நிலையைச் சிறப்பிக்கின்றது. இதனை ஓர் அகத்துறைப் பாட்டு என்று கூறினுங் குற்றமின்று.

இனி, விரித்துரைக்கப்பட்ட கருத்துக்களின் சுருக்கம் வருமாறு :

திருவண்டப் பகுதியின் உள்ளுறை, சமயக்கணக்கர் குறிப் பிட்ட 'தூலசூக்கும வியப்பு' அன்று; அவ் வியப்பினுன் விளக்க முறும் அடிகளாரின் கன்னற்சாறு கொழிக்கும் இன்ப உருவே; உள்ளுறைக்குத் துணையாக வரும் இறைவனின் பெற்றிகளுள், இருநிலைத் தெளிவே தலையாயது; இன்பதுன்ப உணர்ச்சிகள் இரண்டனுள் இன்ப உணர்ச்சியே திருவண்டப் பகுதியில் வீறிட் டெழுகின்றது; தலைவன் பிரிந்துள்ள நிலையில் அவன்றன் தோற்றத்தையும் தண்ணளிச் செயலையும் நினைந்து புலம்பும் தலைவியாக அடிகளார் இருந்துகொண்டு இப்பாட்டைப் பாடு கின்றூர்; இன்பநிலை உணர்த்தலில் அடிகளாரின் தடுமாற்றம் இன்ப அனுபவப் பழமையை விளக்கி நிற்கின்றது; இப்பாட்டில் சமய உண்மைகளின் கருத்துச் சுவையைக் காட்டிலும், இலக்கிய நறுஞ்சுவையே மிகுந்து ததும்புகின்றது. இனைய கருத்துக் களே இங்கு மொழியப்பட்டுள்ளன. இக்கருத்துக்களின் வெளி யீட்டிற்கு இலக்கிய நோக்கமே காரணம்.

வாழ்க தமிழ்

முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ்

உரை நடை

பாலகவி வயிநாகரம்,
ஸ்ரீ திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,
தேவகோட்டை.

(மலர் 16. இதழ் 8-ன் தொடர்ச்சி)

விரல்சுவை யுண்டு கனிந்தமு தூறிய
மெல்லிதழ் புலராமே
விம்மிப் பொருமி விழுந்தழு தலறியுன்
மென்குரல் கம்மாமே
கரைவுறு மஞ்சன நுண்டுளி சிந்திக்
கண்மலர் சிவவாமே
கலுழ்கலு ழிப்புன லருவி படிந்துடல்
கருவடி வுண்ணுமே
உருவ மணிச்சிறு தொட்டி லுதைந்துநி
ணுன்பத நோவாமே
ஒருதா ளுந்தி யெழுந்திரு கையும்
ஒருங்கு பதித்து நிமிர்ந்
தருள்பொழி திருமுக மசைய வசைந்தினி
தாடுக செங்கீரை
ஆதிவயித்திய நாதபுரிக்குகன்
ஆடுக செங்கீரை. (19)

பெருவிரலின் சுவையை உண்டு முற்றிய அமுதம் ஊறிய மெல்லிய வாயிதழ் புலர்ந்து விடாமல், விம்மிப் பொருமுதலைச் செய்து கீழே விழுந்து அழுது அலறி உனது மெல்லிய குரல் கம்மி விடாமல், கரைகின்ற மையினது நுண்ணிய துளியானது சிந்திக் கண்மலர்கள் சிவந்து விடாமல், சொரிகின்ற, மையைக் கரைத்து வரும் கலங்கற் கண்ணீர் அருவியில் படிந்து உடம்பு கருநிறத்தை அடைந்து விடாமல், பெரிய அழகிய பிள்ளைத் தொட்டிலை உதைத்து உனது ஒள்ளிய பாதங்கள் நோவாமல், ஒரு தாளை உந்தி எழுந்து இரண்டு கைகளையும் கீழே பதித்து நிமிர்ந்து அருள் பொழிகின்ற திருமுகம் அசையும்படி அசைந்து இனிமையாகச் செங்கீரை ஆடுவாயாக! ஆதிவைத்தியநாத புரியுள் எழுந்தருளியுள்ள குகப் பெருமானே! செங்கீரை ஆடி அருளுவாயாக! (தொடரும்)

வாழ்வில்,
வாயுக்களின் (ஸ்வரோதயம்) சிறப்பு

அக்னிஹோத்ரி ஸ்ரீ குரு ராமப்யாரே அவர்கள்

1965-ம் ஆகஸ்டு மாதம்

"கல்யாண்" ஹிந்தி பத்திரிகையில எழுதிய கட்டுரையின் தமிழாக்கம்.

மொழி பெயர்த்தவர் – திருப்பனந்தாள்

ஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் உயர்நிலைப்பள்ளி

தலைமை ஆசிரியர்

ஸ்ரீ S. கிருஷ்ணமூர்த்தி, அவர்கள். பி. ஏ., பி. டி.,

வாழ்வில் ஸ்வரோதயம் பற்றிய அறிவு பயனளிக்க வல்லது. இது மிகவும் இரகசியமானதும் சிறந்த செல்வமு மாகும். உலகில் ஸ்வரபலம் என்பது ஓர் பெரிய சக்தி. இதனால் பகைவனின் தோல்வியும், லக்ஷ்மி கடாக்ஷமும் சித்தியாகும். உலகில் இதனால் சாதிக்க முடியாத செயல் எதுவுமில்லை. ஸ்வரோதய சாஸ்திரத்தை நிர்வகிப்பவர் சிவபெருமான். அவர் தான் பார்வதியம்மைக்கு ஸ்வர உற்பத்தி பற்றிய இரகசி யத்தை விளக்கியவர். பழங்காலத்தில் தோன்றிய முனிவர்கள் இதை அறிந்திருந்தமையால் தான் முக்காலமுமறிந்தவர்களா யும் சித்தி பெற்றவர்களாயும் இருந்ததோடு தம் விருப்பம்போல் பிறப்பு இறப்பினையும் தோற்றுவிக்கும் ஆற்றலுடையவர்களாயி ருந்தனர். ஸ்வர ஞானம் பிரம்மத்தை அடையும் சாதனம். ஸ்வரோதயத்தின் மகிமை தொன்றுதொட்டு பாரத நாட்டவர் வாழ்க்கையில் ஊறிய ஒன்று; அதனால்தான் பாரதம் ஞானப் படைப்பில் முதன்மையான இடத்தைப் பெற்றுள்ளது.

தற்போது ஸ்வர உற்பத்திபற்றிய அறிவு அனேகமாக ஒருவருக்கும் இல்லை எனலாம். இதனை யறிந்தவர்களின் வாழ்க்கை மிகவும் வெற்றிகரமாய் அமையும். ஸ்வர சாஸ்திரம் மிகவும் விஸ்தாரமானது; தீவிரமாக ஆழ்ந்து பயில வேண்டியது.

இக்கட்டுரையில் நான், வாழ்வில் அதிகம் பயன் தரும் சில ஸ்வரங்களை மட்டுமே என்னுடைய அனுபவத்தால் அறிந்தபடி விவரிக்கின்றேன்.

நம்முடைய இச்சரீரம் எண்ணற்ற (இரத்தக் குழாய்களால்) நாடிகளால் ஆனது. நாபியிலிருந்து கழுத்துவரை எழுபத்தி ரெண்டாயிரம் நாடிகள் வலைபோல் பின்னிக்கொண்டுள்ளன. இக் குழாய்களில் சஞ்சாரம் செய்யும் காற்றைப்பற்றிய அறிவே ஸ்வரோதய சாஸ்திரமாகும். நாபியில் உள்ள குண்டலக் குழாயே எழுபத்திரெண்டாயிரம் சிரைகளுக்கும் மூலஸ்தானம். இக் குழாயிலிருந்து மேல் நோக்கிச் செல்லும் பத்து சிரைகளும், கீழ்நோக்கிச் செல்லும் பத்து சிரைகளும் முக்கிய மானவை. இவற்றுள் சில கோணலாயும், சில உயர்ந்தும், சில தாழ்ந்தும் உள்ள உப குழாய்கள். முழுமைபெற்ற குழாய்கள் சக்கரம் போன்று சரிரம் முழுவதும் வியாபித்துள்ளன. இவற்றுள் பத்து சிரைகள் முக்கியமானவை. இவற்றின் நிலைகள் கீழ்க்கண்டவாறுள்ளது.

(1) இடா: சரீரத்தின் இடதுபுறத்தில் உள்ளது.
(2) பிங்கலா: சரீரத்தின் வலது புறத்தில் உள்ளது.
(3) சுஷும்ணு: சரீர மத்தியில் உள்ளது.
(4) ஹஸ்தி ஜிஹ்வா: வலது கண்ணில் உள்ளது.
(5) பூஷா. வலது காதில் உள்ளது.
(6) யசஸ்வினி. இடது காதில் உள்ளது.
(7) அலம்புஷா: வாயில் உள்ளது:
(8) குஹூ: லிங்கப்பகுதியில் உள்ளது.
(9) சாங்கினி: குதத்தில் உள்ளது.
(10) காந்தாரீ: இடது கண்ணில் உள்ளது.

இப்பத்து குழாய்களிலும் ஸ்வரத்தை உண்டாக்கும் மூன்று நாடிகள் பிரதானமானவை. அவையாவன: இடா, பிங்கலா, சுஷும்ணு ஆகியவை. மேற்கூறிய பத்து குழாய்களும் உடலின் பத்து துவாரங்களில் அமைந்துள்ளன. இவற்றைத் தழுவி உடலில் ஐந்து பிராண வாயுவும் மற்றும் ஐந்து உபபிராண வாயுவும் உள்ளன. பிராண, உபபிராண வாயுக்களாவன:—

1. பிராணவாயு :-

(1) பிராணவாயு: இதயத்தில்
(2) அபானவாயு: குதத்தில்
(3) ஸமானவாயு: நாபியில்.
(4) உதானவாயு: தொண்டையின் மத்திய பாகத்தில்
(5) வியானவாயு: சரீரம் முழுவதும்

2. உப பிராணவாயு :-

(1) நாகவாயு: ஏப்பத்துடன் கிளம்புவது
(2) கூர்மவாயு: கண்ணிமைகளைத் திறந்து மூடச் செய்வது
(3) கிருகல்வாயு: தும்மலின்போது வேகமாக உட்சென்று வெளிவருவது
(4) தேவதத்தவாயு: கொட்டாவியுடன் உட்செல்வது
(5) தனஞ்சயவாயு: உடலில் உயிர் நீங்கும்வரை நிலைத்திருப்பது

மேற்கூறிய பிராணவாயு ஐந்தும், உப பிராணவாயு ஐந்தும் உடலினுள் பரவியுள்ள எல்லா இரத்தக் குழாய்களிலும் உயிரளிக்கும் சக்தியைச் செலுத்துகின்றன. இப்பிராண உப பிராணவாயுக்களே நாடித் துடிப்புக்கு முக்கிய காரணமாவன. பிராணவாயு குறைவதால் நாடித் துடிப்பு கெடுகிறது. நாடியின் ஆரோக்கியம் இப்பிராண, உபபிராண வாயுவின் கதியைப் பொறுத்துள்ளது.

முக்கியமான மூன்று நாடிகளுள் இடா என்பதில் சந்திரனும், பிங்கலாவில் சூரியனும், சுஷும்னுவில் சிவனும் உறைந்துள்ளனர் என்று புராதன காலத்து முனிவர்கள் கருதினர். இடா நாடி சுபத்தைக் கொடுக்கக்கூடியதும், காரிய சித்தியைத் தர வல்லதுமாகும். பிங்கல நாடி உலகினை ஆக்குவதும், சுஷும்னு கேடு விளைவிப்பதும் ஆகும். இடா நாடியில் சந்திரனிருப்பதால் அது சந்திரநாடி எனவும், பிங்கலாவில் சூரியன் உள்ளதால் அது சூரியநாடி என்றும் அழைக்கப்படுகிறது.

சந்திர நாடியில் பெருக்கேற்படும் போது துவங்கும் செயல் யாவும் வெற்றிபெறுகின்றன. சூரிய நாடி கொடிய காரியங்

களில் (போரிடுதல் முதலியன) வெற்றியைக் கொடுக்கவல்லது. புக்தி – முக்தி (இகபரசுகங்கள்) ஆகிய பலன் வேண்டும் செயல்கள் சுஷும்ன நாடியில் பெருக்கெடுக்கும்போது செய்தல் நலமாகும். நாசித் துவாரங்களிரண்டிலும் சமமாக வாயு ஓடுவது சுஷும்ன நாடியின் பயனேயாகும்.

சரீரத்தை முக்கியமாகக் காப்பாற்றும் சக்தி வாயுவே. அசைவற்ற நிலையில் சரீரத்தின் வெளியிலிருந்து உள்வரை பத்து அங்குலமும், உள்ளிருந்து வெளியில் பன்னிரெண்டு அங்குல தூரமும் வாயுவின் வேகம் நிதானமாய் உள்ளது. ஆனால் உடல் அசையும்போது இவ்வேகம் மாறுகிறது. நடக்கும்போது பதினன்கு அங்குலமும், ஓடும்போது நாற்பத்திரண்டு அங்குலமும், புணர்ச்சியின் போது அறுபத்தைந்து அங்குலமும், சாப்பிடும்போதும் வாந்தியெடுக்கும்போதும் பதினெட்டு அங்குலமும், உறங்கும்போது நூறு அங்குலமும் காற்று வெளியில் செல்லுகிறது. இவ்வேகம் இடா, பிங்கலா, சுஷும்ன நாடிகளால் அறியப்படுகின்றன. நாடிகள் மீது பகல், இரவு, திதிகள் இவற்றின் செல்வாக்கும் இயல்பாக ஏற்படுகிறது. வளர்பிறையில் பிரதமை முதல் திருதியை வரை சந்திரஸ்வரமும், சதுர்த்தி முதல் ஷஷ்டி வரை சூரிய ஸ்வரமுமாக - இவ்விதம் பௌர்ணமி வரை மூன்று நாட்களுக்கு ஒரு முறை மாறுபடும். அதேபோல் தேய்பிறையில் பிரதமை முதல் திருதியை வரை சூரிய ஸ்வரமும், சதுர்த்தி முதல் ஷஷ்டி வரை சந்திர ஸ்வரமுமாக அமாவாசை வரையில் மூன்று நாட்களுக்கொரு முறை மாறுபடும். வளர்பிறையில் பொழுது புலரும் நேரத்தில் இரண்டரை நாழிகை சந்திர ஸ்வரமும் அதன் பின்னர் சூரிய ஸ்வரமும் பெருக்கெடுக்கும். இதேபோல் தேய்பிறையில் இரண்டரை நாழிகை வரை சூரிய ஸ்வரமும் பின்னர் சந்திர ஸ்வரமுமாக முறைப்படி நாளின் 60 நாழிகையும் சென்று கொண்டேயிருக்கிறது. இவ்விதம் மனித ஸ்வரங்கள் இரவு, பகல் மற்றும் பக்ஷங்களின் மகிமையால் பாதிக்கப்படுகின்றன.

மேற்கூறிய முறைப்படி நாடிகளின் வழியே ஸ்வரங்களின் பெருக்கு ஏற்படுமாயின் வாழ்க்கை ஆரோக்கியமாயும், இன்பமளிப்பதாயும் அமையும்; இதற்கு மாறாக வளர்பிறையில்

சந்திர ஸ்வரத்துக்கு பதிலாக சூரிய ஸ்வரமும், தேய்பிறையில் சூரிய ஸ்வரத்துக்கு பதிலாக சந்திர ஸ்வரமும் பெருகிடில் வாழ்க்கை துன்பமுடையதாயும் சிக்கல்களிலும் கழியும். வாழ்க்கைப் போக்கினை ஆராய்ந்தறிய மேற்சொன்ன ஸ்வரங்களை அறிதல் அவசியம். முனிவர்களுக்கு இந்த ஸ்வரங்களைப் பற்றிய பூரண ஞானமிருந்ததால் அவர்கள் வருங்கால முணர்ந்தனர். இந்த ஸ்வரங்களின் மகிமை தனி மனிதனின் வாழ்க்கையை மட்டும் சார்ந்திராமல் வெளியுலகின் செயல்களையும் சார்ந்தது. இவற்றுக்கு வெற்றிகரமான பயிற்சி அவசியம்.

இவ்விதம் மனிதன் தனது ஸ்வரகதிகளை யறிந்து தினசரி வாழ்க்கையில் ஈடுபடுவானாயின் மிகப்பெரிய ஆபத்துக்களிலிருந்தும் விடுபடுவான். ஸ்வரஞானத்தால் அடைய முடியாத பொருள் உலகில் எதுவுமில்லை. அடைய முடியாதது ஸ்வர ஞானம் பற்றிய அறிவும் பயிற்சியுமே. இச்சிறு கட்டுரையில் நான் ஸ்வரஞானத்தின் முகவுரையே எழுதியிருக்கிறேன். வாசகர்களுக்கு ஸ்வரஞானத்தில் சுவையும், இவ்வறிவு நன்மை பயக்கவல்லது என்ற எண்ணமும் ஏற்படுமாயின் வருங்காலத்தில் இதைப்பற்றி இன்னும் அதிகமாயும் விளக்கமாயும் எழுத முயற்சி செய்வேன்.

"ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளி வருகிறது. சமயப்பொருள் முதலியவை குறிதத தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது. சந்தாத் தொகையைக் கீழ்க் கண்ட முகவரிக்கே அனுப்பிவைக்கவும்.

ஆண்டுக் கையொப்பம்,

உள்நாடு ரூ. 2 – 25 * வெளிநாடு ரூ. 3 – 00

செயலாளர். "ஞானசம்பந்தம்" அச்சகம்.

தருமபுரம், மாயூரம் P. O.

உ

திருச்செந்திலாண்டவன் துணை

திருவாசக அநுபூதி உரை*

(*சீகாழித் தாண்டவராயர் அவர்கள் இயற்றியது*)

திருச்சிற்றம்பலம்

திருச்சதகம் — ஒன்பதாம் கொத்து

இனி, ஒன்பதாங் கொத்து, கொடுத்த வாழ்வெல்லாம் பேரின்பமே என அருளும் சிவசத்தி அநுபூதி. சிறியேன் செய் பிழை பொறுத்தல் வேண்டுமென விண்ணப்பிக்கும் திருவருள் விநியோகமாவன :—

மானேர் நோக்கி யுடையாள் பங்கா மறையீறறியா மறையோனே
தேனே யமுதே சிந்தைக்கரியாய் சிறியேன் பிழைபொறுக்கும்
கோனே சிறிதென் கொடுமைபறைந்தேன் சிவமா நகர்குறுகப்
போனா ரடியார் யானும்பொய்யும் புறமே போந்தோமே.

(இ - ள்). மான் போன்ற திருநோக்கமுடைய அம்மைக்கு வாமபாகம் அளித்த நாதனே! வேத முடிவிற் காணாது (நிற்கும்) மறைப் பொருளோய்! அன்புத்தேனே! இன்பவமிர்தே! சிந்தனைக் கெட்டாத சிவமே! அடியேன் செய்யும் பிழை அநேகத்தையும் பொறுக்கும் நாதனே! அடியேன் (படும்) கொடுமை சிலவற்றைச் சந்நிதானத்தில் விண்ணப்பம் செய்தேன். சிவனடியார் சிவ புரம் சேர்வதானார்கள். அடியேனும் எனதுண்மை மலபோதமான யானெனதென்ற பொய்யும் புறமானோம்; என் செய்வேன்!—என அருளியதைக் காண்க.

---

* *இவ்வரிய நூலைப் பதிப்பித்த சென்னை-திருவான்மியூர், மகா மகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் நூல் நிலையத தாரின் அனுமதி பெற்று இது வெளியிடப பெறுகின்றது. இதன் விலை ரூ. 13/- ஷை நூல் நிலையத்தில் கிடைக்கும், 20% கழிவு உண்டு.*

List of Translations of the

TIRUK-KURAL

in Indian and Foreign languages.

I. ENGLISH

1794 *Kindersley* - Extracts from Teeroovaulavar Kuddal or The Ocean of Wisdom

1812 *F. W. Ellis - Kural*, three series of verses on ethical and erotic themes. (left unfinished on death of *Mr. Ellis*)

1840 *Rev. W. H. Drew* - The Cural of Thiruvalluvar (63 chapters only)

1871 *C. E. Gover* - Odes from the Kural (selections only) in pages 200 to 245 of his book 'The Folk-Songs of Southern India'.

1873 *E. J. Robinson* - Kural (the first 240 couplets in Tales and Poems of South India pp. 14 to 52)

1875 *E. J. Robinson* — The Divine Pariah (the legends connected with the life of Thiruvalluvar, with a metrica translation of parts I & II Tales and poems of South India pp. 49 to 149)

1885 *Rev. J. Lazarus* - The Kural of Thiruvalluvar.

1886 *Rev. G. U. Pope* - Sacred Kural of Thiruvalluva Nayanar (2nd Ed. 1958 by S. I. S. S. W. P. Society Ltd.)

1915 *Mrs. Thirunavukkarasu* - (Poona) A Gem for each day. A selection of 366 verses.

Reproduced with the Kind permission of the Editor 'Ezhuthalan'

1916 *V. V. S. Iyer* - Maxims of Thiruvalluvar (2nd Ed. 1925, 3rd Ed. 1951, 4th Ed. 1961)

1919 K. *Vadivelu Chettiyar*

1920 *S. Sabaratnam Mudaliar*

1925 *Madhovaiya*

1925 *S. M. Michael*

1929 *M. S. Poornalingam Pillai* - Critical Studies in Kural

1931 *Rev. H. A. Popley* - The Sacred Kural or The Tamil Veda of Thiruvalluvar

1933 *Aranganatha Mudaliar*

1935 *C. Rajagopalachari* - A few verses only of Part I

„ Similarly Parts II & III

1949 *V. R. Ramachandra Deekshitar*

1950 *M. R. Rajagopala Iyengar*

1953 *A. V. Chakravarthi Nayanar* (A research)

1955 *Issac D. Thangaswamy*

1962 *K. M. Balasubramaniam*

(Not known) } *V. Paramasivam Pillai*

II MALAYALAM

End of 16th Century A. D. A manuscript copied in 777 Malayalam Era discovered by *S. R. Ranganathan,* Librarian, Madras University and reported in the Annual Report for 1933-34 of the Archaeological Department of the Cochin State

1915 *Govinda Pillai*

1957 *Gopala Kurup*

„ *Ramakrishna Pillai*

III LATIN

1730 *Rev. Fr. C. J. Beschi*, Books I & II

1856 *Erklarung von Karl Graul* (incomplete)

1865 (not known) Thiruvalluveri Kural versione Latina (adnotationibus glossarioque illustratus)

IV FRENCH

1767 An Edition in the Bibiliothique Nationale referred to by Ariel.

1848 *E. Ariel* - Kural de Tiruvalluvar.

1852 Fragmet traduits du Tamoul in Journal Asiatique.

1854 *P. G. du Dumast* - Maximes traduites des Courals de Tirouvallouvar

1857 do.

1867 *Lemaraise*.

1876 *Louise Jacolliot* - Portions of the Arattuppal and Porutpal.

1889 *C. de Barigue de Fontainue* - Kamattuppal only.

1942 *Diagon*

V GERMAN

1803 A. F. Cammers

1847 a few couplets by *Friedrich Ruckert*

1854 } Erkalarung von K Graul
1865 }

VI SANSKRIT

19th century middle — SUNITE KUSUMA MALA — *Appa Deekshitar* of the Court of Aayilyam Tirunal, Maharaja of Travancore [1860 - 1880] (published 1922) Arattuppal only

1942 *Govindarai Jain* of Mohourani (Jhansi) Parts I & II only

1961 *Srirama Desikan*-Arattuppal only

VII TELUGU

1887 *Kannuparthi Venkatarama Srivaidyanatha Nath*

1892 *Narasimhalu Naidu*

1948 *Sriramulu Reddy*

1954 *Radhakrishna Sarma*

? *Jalayya* †
? *Gopal Rao of Ellore* †
? *Sri Garimalla Satyanarayana* †

† (Manuscripts referred to by V. V. S. Aiyar in a foot note to the Preface of his 2nd edition)

VIII HINDI

1924 *Khemanand Rahat* (Parts I & II only)

1942 *Covind Rai Jain* Parts 1 & 2 only in verse

1951 *B. D. Jain* (Tiruppanandal Mutt)

1958 *Shankar Raju Naidu* (Madras University)

1964 *M. G. Venkatakrishnan* (Part I only, verse)

IX BENGALI

1939 *Nalini Mohan Sanyal*

X MARATI

1948 *Sane Guruji*

XI RUSSIAN

1963 *Yuri Glazov*

XII FIJI

1964 *Samuel Berwick*

XIII SINHALESE

1961 *Misigamy*

XIV BURMESE

1964 *U. Myo Thant*

XV MALAY

1964 *Inja Ramli Binvaraji*

XVI GUJARATI

? *Najuklal Choksi*

XVII KANNNADA

? *Gundappa*

XVIII URDU

1965 *Hazrat Suharawardy*

திருமுறை நண்பர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

அகத்தியர் தேவாரத்திரட்டு

புதிய பதிப்பு

விசுவாவசு ஆண்டு ஆவணி மூல வெளியீடு

99+19=118 பக்கம் வெள்ளைததாள்

அகத்தியர் தேவாரத்திரட்டின் வரலாறு, குறிபபுரைகள்
ஆகியவை, அடங்கியது,

தனிப் பிரதி அடக்க விலை ரூ. 0-36.

ஒரே சமயத்தில் 20 பிரதிகளுக்குமேல் வாங்குவோருக்கு 20% கழிவு.
தபால் கட்டணம் வேறு.

கிடைக்குமிடங்கள்:—

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில்
ஸ்ரீவைகுண்டம். *(திருநெல்வேலி ஜில்லா)*
2. "தியாகராச விலாசம்"
பிள்ளையார் கோயில தெரு; திருவேட்டீசுவரன்பேட்டை,
திருவல்லிக்கேணி, சென்னை—5.

கடலும் புணையும்

திரு. ந. வி. செயராமன் அவர்கள் எம். ஏ.,
விரிவுரையாளர்,
தமிழ் ஆராய்ச்சித்துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

உவமையிலாக் கலைஞானமும் உணர்வரிய மெய்ஞானமுமாகிய பதியை அடைய வேண்டிய உயிர், பாசத்தால் ஈர்க்கப் பட்டு, பிறவி என்னும் பெருங் கடலில் கிடந்து உழல்கின்றது. பிறவி என்னும் கடலில் துன்பம் அலைகளாக வந்து உயிரை அலைக்கழிக்கின்றது. பற்றுகோல் இன்றி அலமந்து கிடக்கும் உயிருக்கு மாதர் என்னும் காற்றும் துயர் தருகின்றது. காமம் என்ற சுறு மீன்கள் இடையிடையே அல்லற்படுத்துகின்றன. இத்தகைய துன்பங்களால் சூழப்பட்ட உயிருக்கு அக்கடலினின்றும் கரையேற புணையொன்று கிடைத்தால் எவ்வளவு நன்மை தரும்? துன்பக் கடலில் தடுமாறும் உயிர்க்கு உதவும் புணையொன்றை மாணிக்கவாசகர் காட்டுகின்றார். காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார் தமை நன்னெறிக் குய்க்கும் திருவைந்தெழுத்தே அப்புணையாகும். அப்புணையைக் கொண்டார், அல்லற் கடலினின்றும் கரையேற இயலும். இவ்வுண்மையை உணர்ந்த மணிவாசகர்,

"தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத்
தடந்திரையா லெற்றுண்டு, பற்றொன் றின்றிக்
கனியைநேர் துவர்வாயா ரென்னுங் காலால்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்
டினியென்னே யுய்யுமா றென்றென் றெண்ணி
அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின் றேனை
முனைவனே முதலந் தமில்லா மல்லற்
கரைகாட்டி யாட்கொண்டாய் மூர்க்க னேற்கே"

என்று பாடுகின்றார். மேலும்,

அணைஆர் புனல்தில்லை அம்பலத்தே ஆடுகின்ற
புணையாளன் சீர்பாடிப் பூவல்லிக் கொய்யாமோ

என்றும் புகழ்ந்து பாடுகின்றார். புணையாக அமைந்த அப் பேரருளாளனையே புணையாளன் என்ற பெயரால் சுட்டிப் புகழ்ந் துரைக்கின்றார்.

பிறவியைப் பெருங் கடலாகவும், நான் என்னும் அகப் பற்றைத் துன்பந் தரும் மகரமாகவும், இருவினைகளை அலைக் கழிக்கும் அலைகளாகவும், மங்கையரைச் சண்டமாருதச் சுழலாக வும் உருவகித்து, இத்தகைய துயர்க்கடலில் நிலைகெட்டு மதி மயங்கிக் கிடக்கும் தன்னை முத்தியாங் கரைசேரக் கருணை காட்டுமாறு, தன் சித்தமிசை குடிகொண்ட தெய்வத்தை உள் ளுருகி வேண்டுகின்றார் தாயுமானவர். அல்லற் கடலினின் றும் மல்லற் கரையேற்றுமாறு அல்லல் தீர்க்கும் அருமருந் தாகிய இறைவனை இறைஞ்சும் இப்பாடலில், இறைவனைப் புணை யாளனாக எண்ணுந் திறத்தைக் காண்கின்றோம்.

பிறவியாகிய கடலை, வெய்தாய வினைக்கடல் என்றும், பிறவிப் படுகடல் என்றும், அல்லற் கடல் என்றும், இடர்க் கடல் என்றும் தேவார ஆசிரியர்கள் பலவாறு சுட்டியுள்ளனர். பிறவிக் கடலில் துயறுரும் உயிர்கள்மீது, இறைவன் தன் பெருங் கருணைத் திறத்தால் இரங்கி அவை கட்கு அருள்புரி கின்றான். இவ்வுண்மையை

"வெய்தாய வினைக்கடலில் தடுமாறு முயிர்க்கு மிக
இரங்கி அருள்புரிந்து வீடுபேருக்கம் பெய்தானை....!"

என வரும் அடிகளால் உணரலாம். இறைவனை,

"பந்தித்த வல்வினைப் பற்றறப் பிறவிப்படுகடல்
பரப்புத் தவிர்வான்"

என்றும்,

'அல்லற்கடல் நின்றும் ஏறவாங்கி,
நெறிதான் இதுஎன்று காட்டினனை'

என்றும், அவன் உயிர்கட்கு அருள்புரியும் எளிமையைத் தேவார ஆசிரியர்கள் நாவாரப் பாடுகின்றனர்.

மேலும் துன்பமாகிய பிறவிக் கடலுள் சுழிக்கப்பட்டு இளைக்கின்ற உயிர்களைக் காக்கும் தோணி என்றும் இறைவன் சுட்டப்படுகின்றான்.

“இடர்க்கடலுட் சுழிக்கப்பட்டிங் கிளைக்கின்றேற்கு
அக்கரைக்கே ஏறவாங்கும் தோணியை”

என்பது அப்பர் வாக்கு.

பிறவியைப் பெருங் கடலாகவும், கடலைக் கடக்கும் நாவா யாக அறத்தையும் குறிப்பிட்டு,

“பிறவியென்னும் பெருங்கடல் விடுஉம்
அறவி நாவாய்”

என்று மணிமேகலையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும்

“ஆழ்கடற் புணையினன்ன அறிவரண் சரணடைந்தான்”

என்ற சிந்தாமணியுள்ளும்,

“நீப்பரும் பிறவிநீர்க் கடலைநீந்துநற்
றேப்பையாம் திருவுரு”

என்ற மேருமந்தரப் புராணத்துள்ளும் கூட, பிறவி பெருங் கடலாகவும், அறிவன் பாதங்கள் புணையாகவும் கூறப்பட்டுள்ள தைக் காண்கின்றோம்.

திருவள்ளுவப் பெருமானும் இக்கருத்தையே கூறியுள்ளார்.

“பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதார்.”

என்ற குறளில் பிறவியைப் பெருங்கடலாக உருவகித்து, இறை வனடியைப் புணையாகக் கொண்டவரே அதனை நீந்த இயலும் என்ற கருத்து கூறப்பட்டுள்ளது அறியத்தக்கது. இப்பாடலில் இறைவனடி என்பதற்கு ‘இறைவனடி என்னும் புணையை’ என்று பொருள் கூறி, ‘காரணகாரியத் தொடர்ச்சியாய்க் கரை யின்றி வருதலின் ‘பிறவிப் பெருங்கட’லென்றார் என்றும் பரி மேலழகர் உரை விளக்கம் வரைந்துள்ளதும் அறியத் தக்க தாகும்.

பிறவிக் கடலில் தடுமாறும் உயிர்கட்கே இறைவனடி புணையாக விளங்குமென்றால் சாதாரணக் கடலில் வீழ்ந்துழல்வார்க்கு இறைவனடி புணையாக விளங்குந் தன்மையைக் கூறவும் வேண்டுமோ? 'நாமார்க்கும் குடியல்லோம்' என்று முழங்கிய நாவுக்கரசருடைய வாழ்வில் இந்த நிகழ்ச்சியைக் காண்கின்றோம்.

அலகில் கலைத்துறை தழைக்கவும் அருந்தவத்தோர் நெறி வாழவும் அவதாரம் செய்தவர் அப்பர் பெருமான். அழலார் வண்ணத்து அம்மானை அன்பில் அணைத்து, காராண்ட மழை போலக் கண்ணீர் சொரிந்து, இறைவனின் பொருள்சேர் புகழினைப் போற்றித் துதித்துப் பேறுபெற்றவர் அப்பர் பெருமான். திலகவதியாரைச் சார்ந்து திருவாளன் பெருவாழ்வு பெற்ற திருநாவுக்கரசருக்கு அமண் குண்டர்கள் இழைத்த தீச்செயல்கள் பல. நீற்றறையிலிட்டும், தீவிடப் பாங்குடைய அடிசில் தந்தும் துயருறாத அப்பரை, கல்லுடன் பிணித்துக் கடலில் தள்ளினர். அப்பர் கட்டப்பட்ட கல் கடலிடை ஒரு மிதவையாக மிதந்தது. இறைவன் திருவடிகளை எண்ணி, திருவைந்தெழுத்தை ஓதி அப்பர் கரை ஏறினார். அமண் குண்டர்களின தீச்செயலால் கடலில் தள்ளப்பட்ட அப்பருக்கு, அதனின்றும் மீண்டு கரையேற திருவைந்தெழுத்துத் துணையாக அமைந்தது. திருவைந்தெழுத்தை ஓதி, கடலினின்றும் கரையேறிய இக் காட்சியை,

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே

என்றும்,

கல்லினோ டெனைப்பூட்டி அமண்கையர்
ஒல்லைநீர் புகநூக்க என்வாக்கினால்
நெல்லுநீள் வயல்நீலக் குடியரன
நல்லநாமம் நவிற்றி உய்ந்தே னன்றே.

என்றும் அப்பரே பாடுகின்றார்.

இறைவனின் திருநாமம் கூறிவழுத்திய அளவில், கல்லுடன் பிணிக்கப்பட்டு கடலிடைத் தள்ளப்பட்ட பிரகலாத ஆழ்வாரும், கடலிடை மிதந்து கரையேறி உய்ந்தார் என்பது கம்பராமாயணம். ஆழ்வார் பிணிக்கப்பட்ட கல் கடலிடையே ஒரு குடுவைபோல மிதந்த அற்புதக் காட்சியை

'நடுவொக்குந் தனி நாயக னுமம்
விடுகிற் கின்றில னுகலின் வேலை
மடுவொத் தங்கதின வங்கமு மன்ருய்க்
குடுவைத் தன்மைய தாயது குன்றமே.'

என்று கம்பரும் கவினுறப் பாடியுள்ளார். கடலிடை தள்ளப்பட்ட ஆழ்வாருக்கு இறைவன் நாமமே புணையாக அமைந்திருந்ததை இங்குக் காண்கின்றோம்.

இறைவனையே எண்ணி, திருவைந்தெழுத்தை ஓதி, நாவுக்கரசர் கரையேறிய நிகழ்ச்சியைக் குறிப்பிடும் சேக்கிழார்

இருவினைப் பாசமும் மலக்கல் ஆர்த்தலின்
வருபவக் கடலில்வீழ் மாக்கள் ஏறிட
அருளுமெய் அஞ்செழுத் தரசை யிக்கடல்
ஒருகல்மேல் ஏற்றிடல் உரைக்க வேண்டுமோ.

என்று பாடுகின்றார். திருவைந்தெழுத்தைப் புணையாகக் கொண்டு உயிர்கள பிறவிக் கடலினின்றும் கரையேற இயலுமென்றால், அதனைப் புணையாகக் கொணடே நாவுக்கரசர் இக்கடலினின றுகரையேறுவது வியப்பில்லை அனறோ! நாவுக்கரசர் கட்டப்பட்ட கல்லை மும்மலம் என்றும், கல்லையும் நாவுக்கரசரையும் பிணித்துள்ள கயிற்றை இருவினை என்றும் கடலைப் பிறவிக் கடலென்றும், நாவுக்கரசரை உயிர் என்றும் உருவகித்து உயிரை உய்விக்கும் புணை திருவைந்தெழுத்தேயாகும் என்பதை மிக அழகாக விளக்கியுள்ள சேக்கிழாரின் மதிநலம் பாராட்டுதற்குரியது.

பிறவிக் கடலினின்றும் உய்ய விரும்பும் உயிர்கள் புணையாகிய திருவைந்தெழுத்தையே ஓதி இறைவனை வழிபடல் வேண்டும் என்பதை ஆன்றோர்கள் வாழ்விலும் வாக்கிலும்

கண்டோம். இத்திருவைந்தெழுத்தை, நகாரம் முதலாக ஓதுவதிலும் சிகார முதலாக ஓதுவதே பிறவிப் பிணியறுக்க உதவும். இதனை

ஆதிமலம் இரண்டும் ஆதியாய் ஓதினால்
சேதியா மும்மலமுந் தீர்வாகா — போதம்
மதிப்பரிதாம் இன்பத்தே வாழலாம் மாறி
விதிப்படியோ தஞ்செழுத்து மே

என்றும்,

நம்முதலா வோதிலருள் நாடாது நாடுமருள்
சிம்முதலா வோதுநீ சென்று

என்றும் உண்மை விளக்கத்துள் உரைப்பது உணரத்தக்கது. உயிர்கட்குப் பிறப்பில்லாப் பெருவாழ்வை அளிப்பது சிகார முதலாய திருவைந்தெழுத்தேயாகும். சிகார முதலாய திருவைந்தெழுத்தை ஓதப் பிறவியாகிய துன்பம் தீரும் என்பதை

சிவமுதலே ஆமாறு சேருமேல் தீரும்
பவம்இதுநீ ஓதும் படி

எனவரும் திருவருட்பயனும் தெளிவுபடுத்துகிறது.

இங்ஙனம், துன்பக் கடலிடைத் தோணித் தொழில் பூண்ட தொண்டர் தம்மை இன்பக் கரைமுகந் தேற்றும் இறைவனின் இன்னருளைப் பாடுதல் வேண்டும். கண்முத்தரும்பிக் கழற் சேவடிக் கைதொழுவார் உள்முத்தரும்ப உவகை தரும் இறைவனின் திருப்புகழைப் பாடுதல் வேண்டும்.

சுந்தர மூர்த்தி சுவாமிகளின்

அற்புதத் திருப்பதிகங்கள்

Hymns of St. Sundarar

திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள், M. A.,
தமிழ் விரிவுரையாளர்,
காசி இந்துப்பல்கலைக்கழகம், காசி.

St. Sudaramurti continued his journey. At Tiruthuruthi prayed for curing him of his illness. According to the divine command he took a dip in the tank inside the temple and was cured. After visiting many shrines on his way. St. Sundarar reached Tiruvarur. There at the temple he was granted vision of the right eye also.

திருவாரூர்: பண்: செந்துருத்தி

"மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று முகத்தால் மிகவாடி
ஆளா யிருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவா ரூரீர் வாழ்ந்து போதீரே!"

"The devotees, who are your slaves for ever and who don't pray to anybody else for any favour, burning like an unkindled fire, with a heavy heart and exhibiting their woes on their face, pour out their worries in your presence, and you, the Lord of Tiruvarur, keep quiet; Live you long by yourself".

(To be continued)

திருவருட்பிரகாச வள்ளலாரென்னும் சிதம்பர இராமலிங்க சற்குரு புலம்பற்கண்ணி*

தொகுத்தவர், திரு. P. P. துரைசாமி அவர்கள்,
கோயமுத்தூர்.

[மலா 16, இதழ் 7-ன் தொடர்ச்சி]

சத்தியமா நின்மொழியைத் — தப்பாதென்றே யெண்ணி
நித்தியமுந் துன்பமுற — ளீதியதோ சறகுருவே. 251

உலகநாட்டம் பலவா — யுற்றவிந்நா யேறகுக்
கலகமிலா மெய்வாழ்வு — காணுமோ சற்குருவே 252

வீடுவிட்டுக் காடுசெல்லும் — வேளையினின் னேக்கமென்பால்
நாடும்படி யருளல் — ஞாயமன்றே சற்குருவே. 253

எல்லவரு மிவ்வுலகில் — எந்தை நின்மாணவரி
னல்லனென்பார் யானு — நடித்துள்ளேன் சற்குருவே. 254

செவ்வகையோர் காலெனற — செய்ய கவியின் பொருளை
யிவ்வகை யென்றென்பா — லிசைத்தருள்வாய் சற்குருவே. 255

தீக்கண்ட பஞ்சென்னத் — தீவினைகடீரு மென்றுன்
னேக்குண்டே னல்லோர் — நுவனறிடுவார் சறகுருவே. 256

பற்றறுதல் வீடென்னும் — பற்றுவது பந்தமென்றுஞ்
சொற்றவவ் வண்ணந் — துறக்கவருள் சற்குருவே. 257

வடற்சிற் சபையை — வணங்குவோர்க் கென்றும்
உடற்சித்தி யுண்டென் — றுரைத்தருளுஞ் சற்குருவே. 258

உத்தரஞானம் பெறுதற் — குத்தர சிறசித்திபுரத்
தொத்தநெறி யுண்டென் — றுரைத்தருளுந் சற்குருவே. 259

வருநாளிலே தோ — வருமோ வென்றேங்கா
தொருநாளிருந்த திலை — யுத்தமவென் சற்குருவே. 260

(தொடரும்)

---

*திரு. ச. மு. கந்தசாமி பிள்ளையவர்கள இயறறியது.

தாயுமானவரின் – பராபரக்கண்ணிகள்

Couplets in venerable adoration of the Omnipotent and Omnipresent

sung by

St. THAYUMANAVAR

24

The devotees who have realized and got the full grace of the Supreme Self will never care for the earthly things. Even the Sun and moon and other heavenly bodies are nothing to the devotees and they have hardly any influence on them. Further they have no fear or joy with regard to earthly and heavenly happenings. They are totally indifferent towards the material pleasures, Their mind is compleatly absorbed in the Supreme Self and this is brought out in the following song.

பொங்கியநின் தண்ணருளைப் புட்கல மாய்ப் பெற்றவர்கட்(கு)
எங்கெழுந்தென் ஞாயிறியம்பாய்! பராபரமே!

(பொ – ரை) ததும்பி வழியும் தேவரீர் தண்ணிய திருவருளைப் பூரணமாய்ப் பெற்றவர்கட்குச் சூரியன் கிழக்கில் உதித்தலை யொழித்து மற்றெந்தத் திக்கில் உதித்தால்தான் என்னை?

O....Lord Supreme! Those who are filled with your grace which overflows every where, do not care whether the sun rises in the east or else where.

(தொடரும்)

Translated by Sri. K. PALANISAMY, M.A., Lecturer in Tamil, Sri. K. G. S. Arts College, Arulnandi Nagar.

இயற்கையில் இன்பம்

புலவர். திரு. சி. முனிரத்தினம் அவர்கள்
தமிழாசிரியர், கழக உயர்பள்ளி, ஆதமங்கலம், வ. ஆ.

—<O>—

திருவருணை வரையின் தென்பகுதிச் சாரல், தென்றல் வீசும் இளவேனிற் பருவம். மாலை நேரம். அந்திப் பரிதி தன் பொன்னிற ஒளியை அள்ளி வீசினன். வெண்ணிறம் பூத்திருந்த வானம் செவ்வரிகள் படர்ந்தன. பூமகள் பெற்ற பொருளெல்லாம் பொன்மயமாயின. இவ்வொளிசூழ் எழில் காண என்னிரு கண்கள் போதாவாயின. வண்ணம்சூழ் மாலைப் போதால் ஒன்றிய எனதுள்ளம் பொன்னார் மேனியனைக் கண்டது. காணவே,

"காணுமாறு காணேனுன்னை யந்நாட் கண்டேனும்
பாணேபேசி யென்றன்னைப் படுத்ததென்ன பரஞ்சோதி
ஆணேபெண்ணே யாரமுதே யத்தா செத்தே போயினேன்
ஏணிலா நாயினே னென்கொண் டெழுகே னெம்மானே"

என்ற மணிவாசகப் பெருமான் வாக்கிலே திளைத்து அரன் நிழற்கண்டு மகிழ்ந்தேன்.

அப்பாலண்மைக் கண்ணுள்ள அழகுச் சோலை அழைத்தது. அச்சோலைக்கு வேங்கையும் வேலும், எட்டியும் ஈச்சும் வேலியாய் நின்றன. அடிபெருத்த ஆலும் மாவும் அணிசெய்தன. கொன்றையும் காயாவும் நின்றணைந்த தோற்றம் பெண்ணொரு பாகனை நினைவூட்டியது. தெங்கும் கமுகும் தென்றலுடன் விளையாடி எங்கும் தன் சிரிப்பொலியை இன்பமாய் பரப்பின. செந்தளிர்கள் யாவும் பொன் தகடாய்த் திகழ்ந்தன. முல்லையும் மல்லியும் முறுவலித்து மணம் பரப்பின. புள்ளினங்கள் கூடி பள்ளியென வாழ்ந்தன,

இக்காட்சிகளுக்கு இடையே கருங் குன்றுங்கள் கலைப் பீடமாய்க் கிடந்தன. பசும்புற் படாம் போர்த்திருந்த இவ் வெழிற் சோலையாட்குப் பன்னிற மலர்களே அணிகலன்களாய் அமைந்திலங்கியன. இடையிடையே செல்லும் சிறுநடைப் பாதையையே பெருநகிற்குக் கச்சாகக் கொண்டிருந்தனள். புன்னையும் புன்கும் சிதறியதால் முறுவல் கொண்டனள். இக் கெழுதகு தோற்றத்தால் உளமகிழ்வுற்ற யான், கற்பீடம் ஒன் றில் சொற்பாவையாய்ச் சமைந்தேன். புலனுணர்வுகள் மிகவே புதுத் தென்றலும் உடலைத் தழுவியது. அஞ்ஞான்று,

“கோடையிலே இளைப்பாற்றி கொள்ளும் வகைகிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலே யூறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீரே
உகந்த தண்ணீரிடை மலர்ந்த சுகந்த மணமலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லியப் பூங்காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்திலுறும் பயனே
ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற அரசே என்அலங்கல் அணிந்தருளே.”

என்ற வள்ளலார் பாடலை எனக்குரிய இசையிற் பாடி மகிழ்ந் தேன். அருட்பிரகாச அடிகளார் இவ்வின்பத்திலே ஈடுபட்டு இறைவனைக் கண்டு அலங்கல் அணிந்தருள வேண்டியுள்ளா ரெனத் தெளிந்தேன். தெளிந்த யான் திருப்பொய்கை ஒன் றினையும் அவண் நோக்கினேன்.

ஆண்டு, அத்தடாகத்திற்குத் தண்ணிய உயர்வரப்பே திண்ணிய கரையாய்க் கிடந்தது. கரைபடர்ந்த கருங்குவளை கள் கண்விழித்துப் பார்த்தன. பொன்னிற சிற்றலைகள் மெல் லென எழுந்து மறைந்தன. வெண்டாமரையும் செங்கமலமும் செங்கதிர்க்கு வணக்கம் செலுத்தின. குமுத மலர்கள் அமுத மதியின் வரவு நோக்கி இருந்தன. தெள்ளிய நீரில் வெள்ளிய மீன்கள் பிறழ்ந்து பொன்னிறமாய் விளங்கின. போதுகளி னூடே கம்புட் சேவலும் பெடையும் கண்ணுமூச்சு விளையாடின. புதுமணத் தம்பதிகள்போல இணையுறு வாத்தினங்கள் உலா வந்தன. இப்பொய்கையின் பொலிவிலும் ஈடுற்ற எனக்கு,

" மணிநிற மலர்ப்பொய்கை மகிழ்ந்தாடும் அன்னம்தன்
அணிமிகு சேவலை அகலடை மறைத்தெனக்
கதுமெனக் காணது கலங்கி யம்மடப்பெடை
மதிநிழல் நீருள்கண் டதுவென உவந்தோடி
துன்னத்தன் னெதிர்வருஉந் துணைகண்டு மிகநாணி
பல்மலரிடைப் புகூஉம் பழனஞ்சேர் ஊர "

எனக் கூறும் கலித்தொகைக் காட்சியும் கண்முன் தோன்று நின்று களிப்பினையூட்டிற்று.

இயற்கை அன்னையின் எழில் விளக்கத்தில் இறுமாந்து கிடந்த என்செவிக்குப் புட்குலப் பண்ணிசைகள் தற்கிழமை உணர்த்தவே அவண் சென்றனன். ஆகா! என்னே இறைவனின் படைப்பு! பறவைகளின் மகிழ்ச்சி ஆரவாரமும் செயலும் கூறுதற்கு ஒல்லா. யானொரு கலைமன்றம் அடைந்தவனாகத் தான் உணர்ந்தேன். அம்மன்ற நிகழ்ச்சியை நிரல்படக் காணுங்கால், ஒரு நற்குன்றுமிசை பெருவலி கடுவனும் உருவமை மந்தியும் அமர்ந்திருந்த பொலிவே அச்சோலைக்கு மன்னனும் மாதேவியும் எனக் காட்டிற்று. இக்கவியரசன் முன்னே கவிக் குலங்கள் பல அமைச்சனும், புலவனும், அருங்கடிக் காவலனுமாய்ப் பொறுப்பேற்று இருந்தன. இன்னிசை மன்ற விளம்பரத்தைக் காகம் ஒன்று கரைந்து அச்சோலை வாழ் உயிரினங்களை ஒன்று கூட்டியது. கலை நிகழ்ச்சிகள் தொடங்கியது.

குங்கும வாய்க் கிஞ்சுகங்கள் ரங்கா......ரங்கா......என இறைவணக்கம் பாடின. மலருதும் வண்டினங்கள் ரிங்........ ரிங்........சிள்........ஒய்ன்.......உம் என்னும் ஒலியெழுப்பிச் சுருதி கூட்டின. குயிலினங்கள் இன்னிசை இயைத்துப் பண் பல பாடின. மீன்வால் பறவைகள் மெல்லிய மிடற்றினல் ட்ரிங்...... ட்ரியிங்........குரைங்.........கொஞ்சங்........குரைங் என மோரிசங்கம் அடித்தன. ஒருவகை மைனாக்கள் குழலூதின. மற்றொரு வகைப் பறவைகள் யாழும், வீணையும் பயின்றன. சிட்டுக் குருவிகள் சிட்........சிட்.......சிட்டா........சிட்.......சிட்டா எனத் தாளம் போட்டன. மரங்கொத்திப் பறவைகள் மரங்களைக் கொத்திக் கொட்கொடு கொட்டா......கொட்......கொட் ,,,,,,கொட்டா என மத்தளம் அடித்தன. இவ்வகை இசைக்

கருவிகளுக்கேற்ப மயிலினங்கள் தம் அழகிய தோகையை விரித்துப் பெடைகளோடு ஆடின. ஆடலுக்கும் பாடலுக்கும் ஏற்ப இன்னிசைக் கருவிகளெனப் புள்ளினங்கள் இடைவிடாது இசைத்தன. இம்மன்றங் காணும் மகிழ்ச்சியிலே மன்னனும் சுந்தரனும் அவன் தேவியும் திளைத்து இன்புற்றனர். அவ் வண்ணமே மகிழ்ந்திருந்த எனக்கு,

"கண்களிற் பரிந்து கண்டுவப் பனவே
கைகளிற் றெழுபவே செவிகள்
பண்களிற் புகழும் புகழ்ச்சிகேட் பனவே
பதநினை வலம்புரி வனவே
பெண்குபுற் றிடப்ப வெழுமணி கரவா
விருந்துசென் றிருள்கவர் வனபோற்
றண்கதிர்க் கற்றை கான்றிடுஞ் சோண
சைலனே கைலை நாயகனே." (75)

என்ற பாட்டு ஞாபகத்திற்கு வந்தது. பார்க்கும் இடமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் எம்மான் தோற்றமே, இம்மலைச் சாரலில் முன்னிருந்ததால் தான், கற்பனைக் கருவூலமான சிவப் பிரகாச அடிகளார் தம் இளமைக் காலத்தே கண்டு களித்த காட்சியின் திறமென்னே! என்று எண்ணினேன்.

இவ்வாறு கலையுணர்வு தலைதூக்கவே தன்னை மறந்த லயந்தன்னில் மிதக்கலானேன். ஒண்சுடர் கல்சேர்ந்த ஓரிரு நாழிகைக்குப் பின் ஒளி மதியம் வந்துற்றதை அறிந்து தன்னை உணர்ந்தேன்.

மாலையாம் மங்கை சோலை என்ற சேலை கட்டி சுந்தரிபோல் முன்னர் தோன்றி சொக்க வைத்த தன்றோ! புள்ளினங்கள் மகிழ்ந்த பின்னர் பள்ளிபுக்கன போலும்! அந்திவான் அழகைக் காணேன் மந்திவாழ் சோலை மதியொளி பெற்றுத் திகழ்ந்தது. "மாசில் வீணையும் மாலை மதியமும்-வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசு வண்டறைப் பொய்கையும் போன்றதே – ஈசன் எந்தை இணையடி நீழலே"-என்று பாடிய அப்பர் சுவாமிகள், தான் இடறுற்றஞான்று இயற்கை இன்ப அனுபவத்தால் இறைவனது இணையடி நிழற்கண்டு இன்பம் அடைந்தார். அத்தன்

மைக்கு யான் சிறிதும் ஒவ்வேனுயினும், இயற்கை யன்னையின் இச்சோலைப் படைப்பிலே இறைவன் தோற்றங்கண்டு மகிழ்ந்தேன். இரவு நேரம் வந்துற்றதை யறிந்த யான் இல்லம் ஏகியக்கால்,

"மிக்க நலமுடைய மரங்கள் – பல
விந்தைச் சுவையுடைய கனிகள்......" என்றும்,

"காணி நிலம் வேண்டும் பராசக்தி – ஒரு
காணி நிலம் வேண்டும்"

என்றும் பாடியுள்ள அமரகவி பாரதியாரின் எண்ணங்களையும் நினைந்துக்கொண்டு, அப்பாடலையும் பாடிய வண்ணம் பாரி நிலயத்தை அடைந்தேன். "யான்பெற்ற இன்பம் பெருக இவ்வையகம்" என்னும் ஆன்றோர் வாக்கு இத்தகைய ஈடு பாட்டில் அரும்பியிருக்கும் அல்லவா!

கந்தனுய் வந்து காட்சி அருள்வாயே!

—: பதி :—

எடுப்பு

இன்ப இசையாலே வண்ண மலராலே
பண்பு மனத்தாலே பணிவேன் முருகா! (இன்ப)

தொடுப்பு

விந்தை உலகில் சிந்தை கலங்காமல்
தந்தை நீயென்றே சொந்தம் கண்டேன் (இன்ப)

முடிப்பு

சுந்தரத் தமிழில் மந்திர உபதேசம்
தந்தைக்கு அருளிய இந்திரன் மருகா!
செந்தமிழால் பாடும் எந்தன் இசைகேட்டு
கந்தனுய் வந்து காட்சி அருள்வாயே! (இன்ப)

S. V. பதி,
மதுரை.

HYMNS OF THE TAMIL SAIVITE SAINTS

BY

F. KINGSBURY, B. A. (Madras)

AND

G. E. PHILLIPS, B. A. (Lond.), M. A. (Oxon.)

[மலர் 16, இதழ் 8–ன் தொடர்ச்சி]

II

THIRUNAVUKKARASU SWAMI

(More commonly referred to as APPARSWAMI)

60. அரியானை யந்தணர்தஞ் சிந்தையானை
        யருமறையி னகத்தானை யணுவையார்க்குந்
    தெரியாததத்துவனை தேனைப்பாலைத்
        திகழொளியைத்தேவர்கடங்கோனை மற்றைக்
    கரியானை நான்முகனைக்கனலை க்காற்றைக்
        கனைகடலைக்குலவரையைக்கலந்துநின்ற
    பெரியானைப்பெரும்பற்றப்புலியூரானைப்
        பேசாதநாளெல்லாம் பிறவாநாளே.

Here is a very popular stanza. There used to be a beggar in Madras who recited it, and it alone, all day long.

60. He is ever hard to find, but He lives in the
        thought of the good;
    He is the innermost secret of Scripture, inscrutable,
        unknowable;
    He is honey and milk and the shining light.
        He is the king of the Devas,
    Immanent in Vishnu, in Brahma in flame and in
        wind,
    Yea in the mighty sounding sea and in the moun-
        tains.
    He is the great One who chooses Perumpattapuli-
        yur for His own.
    If there be days when my tongue is dumb and
        speaks not of Him,
    Let no such days be counted in the record of my
        life.

(தொடரும்)

Reproduced with the kind permission of Oxford University Press, Calcutta.

(N.B. Copies available for sale at the above Press.)

உ

சிவ சிவ

புள்ளிருக்குவேளூரில்
ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி
சந்தனுபிஷேக நிதி ரூ. 3,500

'ஆதி வயித்திய நாதபுரிக் குகன்,'

'சடாயுபுரியிற் கருணை வெள்ளமென வீற்றிருக்கும்
ஆனே றுயர்த்திட்ட வையற்கும் அம்மைக்கும்
அருமருந்தாகி நின்ற ஆதிப்பிரான்,

'புண்டரி கங்கள் மலர்ந்த விழிக்கடை பொழியருள் கரைபுரள
அழகு கனிந்து முதிர்ந்த இளங்கனி,

'அன்பாளர்க்கு இன்பம் அளிக்கு மெய்ஞ்ஞான மருந்து,

'மல்கும் செல்வக் கந்தபுரி வாழ்வு,

'மலையாள் வயிறு வாய்த்த முழுமணி,

'மாலிமயத்து மடப்பிடி பெற்று வளத்த இளங்கனி,

'திருமாமடி கட்கென வைத்த கவுத்துவம்,

'மூல மெனக் குல நான்மறை ஒலிடும் முழுமுதல்,

'சங்கத் தமிழின் தலைமைப் புலவன்,

'உள்நெகிழ் தொண்டர் உளத்திருள் சிந்திட ஒளிவிடு முழுமணி,

'தோலாத முத்தமிழ் நாவன்,

'மூவா மாவாம் அச்சூர்வேர் அறத் தொடுவேலன்,

'தேவாதிபர்க்கொரு தேவன்,

'தண்ணென் குறிஞ்சித் தலந்தலை யளிப்பவன்,

'கொழிதமிழ் வேதபுரிக் குமரேசன்,

'அறம் முதுதவமொடு வளர வளர்த்திடு நற்ருய்,

'தெளி தமிழ் பழகிய மதவலி,

'மும்மைத் தமிழ்தேர் கந்தபுரி முருகன்,

'முதிரும் அறிவில் அறிஞர் உணரும் முதல்வன்,

'முனிவர் பரவு பருதிபுரியின் முருகன்,
'குரவுகமழ் தருகந்த புரியிலருள் குடிகொண்ட குமரகுருபரன்,
'அருளா னந்தக் கடற்பிறந்த அமுது,
'உருகும் அடியர் இதயம் நெகிழ உணர்வில் எழுநல் உதயம்,
'கலையும் நிறையும் அறிவு முதிர முதிரு மதுர நறவம்,
'கழுவுதுகளர் முழுக நெடிய கருணை பெருகு சலதி,
'அறிவுள் அறிவை அறியு மவரும் அறிய வரிய பிரமம்,
'இயலும் நடையும் வடிவும் அழகும் எழுதவரியன்,
'ஒழுகு கருணை முழுகு கமல வதனன்,
'விழுது விடு வெண் நிலவு பொழியு நகையன்,
'மழலை முதிர முதிரு மதுரவசனன்,
'அடியவர் எவர்க்கும் இரவினை யொழித்தான்,
'அழகு பொலி கந்தபுரி தழையவரு கந்தன்,
'இவன் எவ்வுயிரும் வாழச் செய்தான்,
'இவன் புத்தி முத்தியும் அளித்தான்,
'ஆயிர மறைக்குமொரு பொருளா யிருப்பவன்,
'அருவென்ன உருவென்ன அன்றென்ன நின்றவன்,
'மெய்கண்ட தெய்வமித் தெய்வமல்லாற் புவியில் வேறில்லை,
'பொன்னுலகு மண்ணுலகும் எவ்வுலகு வேண்டினும்
பொருளன்று இவற்கு மற்ற அழியாத வீடுந் தரக்கடவன்,
'குன்றைத் திறந்திட்ட குடுமிவேல் சூருயிர் குடித்திடவிடுத்தான்,
'கருவீற் றிருந்த பெருங்கருணை கடைக்கண பொழிய
வீற்றிருக்கும் கடவுள்,
'வருபுனற் காவேரி வளநாடன்,
'தென்கலைக்கும் பழைய வடகலைக்கும் தலைவன்,
'செம்பொற் றிருக்கோ புரங்கள் பொலி வேளூரன்,
'இழுமென் மொழித் தெளிதமிழின் வடித்திடு நவரசம்,
'செங்கட் பசுந்தோகை வாம்பரி யுகைத்தவன்,
'தீராத வினை தீர்த்த தம்பிரானும் தையலுகியும் வைத்துச்
சீராட்டி விளையாடும் சேனபதிக் கடவுள்'

என்று இன்னோரன்னவாறு ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளால் முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழில் பலவாறு பாராட்டப் பெறும் வேளூர் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமிக்கு அகம்படித் தொண்டுபுரியும் சிவாச்சாரியார்க்குத் கார்த்திகை தோறும் படிக்காசு அளித்தற்கு முதற்பொருள் நிறுவியது நிற்க, ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமிக்குக் கார்த்திகை தோறும் சந்தனுபிஷேகம் செய்தற்பொருட்டு இத்தருமம் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்றது. இது 'புள்ளிருக்கு வேளூரில் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி சந்தனுபிஷேக நிதி' எனப் பெயர் பெறும்.

2. இதற்குரிய முதற் பொருள் ரூ. 3,500 (ரூபா மூவா யிரத்து ஐந்நூறு). இத்தொகை ஆண்டுதோறும் 7% வட்டி தரக்கூடிய ஐந்து வருஷ நிலையான முதலீடு ஆகக் கும்ப கோணம் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவில் முதலீடு செய்யப் பெற்றுள்ளது. பிக்சட் டிபாசிட் இரசீது நெ. ஏ. 427259 — தேதி 21—7—65உ இம்முதற் பொருள் நம்மாலும் நமக்குப்பின் உரிமை உள்ளவர்களாலும் பரிபாலனம் செய்யப் பெற்றுவரும்.

3. அ. இம்முதற் பொருளினின்று ஆண்டுதோறும் கிடைக்கும் வட்டித் தொகையில் நிர்வாகச் செலவுகளுக்கு என ஒதுக்கப்படும் தொகை போக எஞ்சிய தொகையில் வேளூர் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமிக்குச் சந்தனுபிஷேகம் செய்தற்குக் கிருத் திகை ஒன்றுக்கு ரூ. 15/- வீதம் செலவு செய்யப் பெற்றுவரும். பசலி முடிவில் எஞ்சியுள்ள தொகை முழுதும் ஆடிக் கிருத்திகை நாளில் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமிக்குச் சிறப்பாகச் சந்தனு பிஷேகம் செய்யப் பயன்படுத்தப் பெறும்.

ஆ. கிருத்திகை நாளில் வேளூர் ஸ்ரீ முத்துக்குமார சுவாமிக்குச் சந்தனுபிஷேகம் செய்தற்காக ரூ. 15/- வீதம் தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான வேளூர் தேவஸ்தானத் துக்கு மாதந்தோறும் அனுப்பப்பெற்று வரும். அன்னோர் அஷ் தொகைக்குச் சந்தனம் வாங்கிக் கிருத்திகை நாளில் வேளூர் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமிக்குச் சந்தனுபிஷேகம் செய்து சந்தனுபி ஷேகம் செய்த விவரத்தை நமக்குத் தெரிவிக்கவேண்டும்.

4. வட்டி வரவுக்கு ஏற்ப மாதந்தோறும் அனுப்பப்பெறும் சந்தனுபிஷேகத் தொகை கூட்டவும் குறைக்கவும் பெறும்.

5. இத்தருமம் வேறு எம்முறையிலும் மாற்றியமைக்கப் பெறமாட்டாது. இத்தொகை திரும்பப்பெற்றால் அதிக வட்டி தரக்கூடிய அரசியல் கடன்தாளில் முதலீடு செய்யப்பெறும். இம்முதற் பொருள் நம்பேரிலும் நமக்குப்பின் உரிமையுள்ள வர்கள் பேரிலும் இருந்துவரும்.

திருப்பனந்தாள், 22—7—1965. } (Sd.) *Kasivasi Arulnandi Tambiran*

Registered at Tiruvidaimarudur Sub Registrar's Office on 23-7-65 as No. 35 of 1965 in Book No. 4. Volume No. 53 pages from 19 to 21.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

[ஏழாம் திருமுறை]

★ புதிய பதிப்பு ★

(விசுவாவசு ஆண்டு வைகாசிப் பூச வெளியீடு)

350 பக்கம் வெள்ளைத்தாள், சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாறு, அவரைப்பற்றிய கல்லெழுத்துக் குறிப்புக்கள் ஆகியவை, அடங்கியது. தனிப்பிரதி அடக்க விலை ரூ. 1-30.

ஒரே சமயத்தில் 20 பிரதிகளுக்குமேல் வாங்குவோர்க்கு 20% கழிவு.

(தபால் செலவு வேறு)

கிடைக்கும் இடங்கள்:-

1. T. M. குமரகுருபரன் பிள்ளை, B. A., B. L.,
நிரந்தரத் தலைவர், குமரகுருபரன் சங்கம்,
ஸ்ரீவைகுண்டம்.
(திருநெல்வேலி மாவட்டம்.)

2. திரு. க. சுப்பிரமணிய அய்யர் அவர்கள், B. A.,
தியாகராச விலாசம், 53, பிள்ளையார் கோவில் தெரு,
திருவேட்டீசுவரன்பேட்டை,
திருவல்லிக்கேணி, சென்னை - 5.